# வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம் அதற்குத் தன்னாட்சி மிக அவசியம்

நாற்பது வயதின் பின்னர் ஒரு குளிகை மருந்து தானும் உட்கொள்ளாத எண்பத்திரண்டு வயது இளைஞர் ஒருவரைச் சென்ற வாரம் சஞ்சீவியில் சார்பில் பேட்டி காணும் வாய்ப்புக் கிடைத்தது.

யும், இந்திய தத்துவ ஞானத்தில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் பேட்டியின்போது கண்டு பிரமித்துப்போனேன் திருநெல்வேலியில் அவரது உறவினர் வீட்டில் சந்திப்பு இடம்பெற்றது

அப்போது அன்னார் பேட்டி தர மறுத்தார்.

யவர், சிவில் உரிமை இயக்கத்தில் துணிச்சலுடன் ஈடுபட்டவர், பத்திரிகைத் துறையின் சுதந்திரத்துக்காகப் பல தடவைகள் வாதாடியவர் என்ற ரீதியில் உங்கள் சிந்தனைகள் வாசகர்கள் அறிய வேண்டியவையே — என்று நான்

வயதின் பின்னர் இது வரை நான் ஒரு குளிகை தானும் உட்கொண்டதில்லை. அதிகாலை மூன்று மணிக்கு நித்திரைவிட்டு எழுவேன் குளிர்ந்த நீர் ஒரு டம்ளர் குடிப்பேன் ஐந்தரை மணிவரை படிப்பேன். எழுதுவேன். வழக்குகளைத் தயார்

நாள்தோறும் ஐந்து மைல் நடப்பேன். இது எனது நாளாந்த வாழ்க்கை.

காப்பி, தேநீர் குடிப்ப

## அரசின் விளக்கங்கள் சிரிப்புக்குரியவை என்கிறார் பழம் பெரும் அரசியல்வாதி நடேசன்

அவர்தான் முன்னாள் செனட்டர் திரு எஸ். நடேசன். ஒரு பிரபல சட்டத்தரணி இராணி அப்புக்காத்து அவருடைய வாதத் திறமையையும், சிந்தனை ஓட்

### நினைவலை

டத்தையும் ஆங்கிலத்தில் அவருக்குள்ள பாண்டித்தியத்தையும் கொழும்பு உயர் நீதிமன்றங்களில் நேரில் கேட்டும், கட்டுரைகளில் வாசித்தும் ரசித்ததுண்டு.

எனினும் அவருடைய தமிழ்ப் புலமையையும், திருக்குறள், திருமூலர் பாடல்கள் போன்ற தமிழ் இலக்கியங்களில் அவருக்குள்ள ஆட்சியை

'எங்கள் காலம் காலனித்துவ காலம். அந்த அனுபவங்கள் இன்று எப்படிப் பயன்படும்? எனவே என்னைத் தொந்தரவு செய்யாதீர்' - இப்படி அவர் கூறினார்

'மானுடம் எல்லாக் காலத்துக்கும் ஒன்று தானே. பிரச்சினைகளின் வடிவம் வேறுபடலாம் அதனால்போய் இன்று அவை பயன்படாது என்று கூறமுடியுமா? உங்களுடைய எளிமையை, பிரபல்யம் நாடாத போக்கை மதிக்கிறேன். எனினும் சட்டத்துறையில் புகழீட்டி

சிக்கினேன்

தயங்கித் தயங்கிப் பேட்டிக்குச் சம்மதித்தவர் பின்னர் தன்னை மறந்து தான் செய்யும் உடற்பயிற்சியை மலர்ந்த முகத்துடன் செய்து

செய்வேன்.

காலை 5.30 மணிக்கு கிறீன்பாத்தில் உள்ள எனது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கொள்ளுப்பிட்டிச் சந்தியை அடைந்து. காலி



**பேட்டி: வி. வரதசுந்தரம்**

காட்டுநவு பேட்டியில் இணைத்துப் போனார். நாளாந்த வாழ்க்கை அவர் அளித்த பேட்டி: விவரம் வருமாறு:

எனக்கு இப்போது வயது 82. இன்னும் நல்ல உடல் நலத்துடன் வாழ்கின்றேன் நாற்பது

முகக் கடற்கரை சென்று 'ஊட்கவுஸ்' இல் ஏறுவேன் அந்த ரம்மியமான சூழலில் உடற்பயிற்சி செய்வேன். சில வேளைகளில் கடலில் குளிப்பேன். 8 30 மணிக்கு வீடு திரும்பி நீதிமன்றம் செல்வேன்

இல்லை சைவ உணவு தான் சாப்பிடுவேன் ஒரு நாளைக்கு ஒரு வேளை மதியம் மட்டும் உணவு சாப்பிடுவேன்

தமிழியற் சிந்தனையின் சாரம் திருக்குறள் எனலாம். அங்கே உணவைப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தேவி வழிபாட்டுக்கு நவராத்திரி நாட்கள்

## மிகவும் உகந்த காலம்

நவராத்திரி தேவி விரதம், சிவராத்திரி சிவ விரதம் தேவி பராசக்தியாகிய சிவசக்தி சத்தியும் சிவமும் அன்னையும் பிதாவும். உயிர்கள் குழந்தைகள் அன்னையாகிய தேவி உயிர்களுக்கு கய்திறம் அருளிப் பரம பிதாவை அணுகச் செய்வர்

'தாயுடன் சென்று தாதையைக் கூவி' என்பது பட்டினத்தடிகள் பாடல்

தேவியை, 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்கின்றது திருவாசகம். உயிர்கள் இருளில் கிடப்பவைகள்; குருடுபட்டுக் கிடப்பவைகள் அவைகளைப் புல் முதலிய பிறப்புக்ளிற் செலுத்திச் செலுத்தி மனிதப் பிறப்பை அருளிச் சற்றே விழிக்கச் செய்பவள் அவள்

'எத்திறம் நின்றான்
ஈசன்
அத்திறம் அவளும்
நிற்பள்'

என்கின்றது சித்தியார் ஈசன் இறைவன்

'சிவஞ் சத்தி நாதம்
விந்து சதாசிவன்
உவந் திகழுமீசன்
தருளுருத்
திரன்றுள் மாலயன்
ஒன்றினொன்றுய்
நவந் தருபேதமாகி
ஏகநாதனே நடிப்பன்'
(சித்தியார் உம் சூத்:74)

ஏகநாதன்-இறைவன். இங்கே ஈசன் மகேசன். இறைவன் சிவம் முதல் அயன் (பிரமன்) ஈறுக ஒன்பது பேதமாகிப் பஞ்சகிருத்திய நாடகம் நடிப்பன் ஆகவே அவளும் (இறைவியும்) நவந்தரு பேதமாகி நாடகம்

### நவராத்திரி சிறப்பம்சம்

நடிப்பாள் நவம்-ஒன்பது அவள் நடிப்பு இருண் மலம் போக்கி விழிக்கச் செய்கின்றதொரு கருணை நடிப்பு: இறைவனைக் காட்டிக் கொடுக்கும் நடிப்பு.

நவராத்திரி இறைவி கொள்ளும் நவந்தரு பேதங்களையும் நினைவு கூரச் செய்வதாயிருக்கும்.

சிவம் சத்தி நாதம் விந்து அருநிலை. இந்த நான்கும் இறைவனின் பேதமுமாம்; இறைவியின் பேதமுமாம். இறைவன் சிவம் ஆகும்போது இறைவியும் சிவம் ஆவள் என்பதாம் இறைவன் சத்தியாகும் போது இறைவியும் சத்தி ஆவள். இவ்வாறே நாதம் விந்து என்ற நிலைகளுங்கொள்க.

சதாசிவன் இறைவனின் அருஉரு நிலை அப்பொழுது இறைவி மனோன்மணி யாயிருப்பாள்

**அமரர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

மகேசன், உருத்திரன், மால், அயன் நான்கும் இறைவனின் உருவநிலை. அப்பொழுது இறைவி மகேசையாய், உமையாய், இலக்குமியாய்ச் சரஸ்வதியா யிருப்பாள்.

எத்திறம் நின்றான்
ஈசன்
அத்திறம் அவளும்
நிற்பள்'

என்பதை ஞாபகஞ் செய்து கொள்ளுவாம்.

தேவியின் அருநிலை, அருஉருவ நிலை நமக்கெட்டாதவைகள். உருநிலையில் மகேசை உமை நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கடல் கடந்த கடிதம்

**சிந்துபைரவி-ராகம் புரிகிறதா?**

தம்பி,

"சிந்துபைரவி எப்படி?" எனக் கேட்டெழுதிய கடிதம் கிடைத்தது. பரபரப்பான காலத்தில், பார்க்கும் படங்களிலும், தம்பி, பாடம் பெறுவது அவசியம்;

சிலப்பதிகாரம் சாதாரண வணிகன் கதை. மாதவியின் நடனம் காண்கின்றான் கோவலன்; நிலைதடுமாறுகிறான்;வழிமாறுகிறான் கட்டியமனைவி கண்ணகியை விட்டு மாதவியிடம் போகின்றான்!

கலை உணர்ச்சியைத் தூண்டுகிறது! அறிவு அதற்கு வரம்பிட வேண்டும்! வரம்பில்லா உணர்ச்சியாற் கோவலன் சீரழிகின்றான் சிலப்பதிகாரத்தின் மறுபதிப்புக்கள் உருமாறி, பெயர்மாறி, கதைமாறி வந்துள்ளன!

'இரத்தக்கண்ணீர்', 'இருமலர்கள்', சின்ன வீடு'—இப்படி எத்தனையோ! அதன் வரிசையிலேதான் பாலசந்தரின் சிந்துபைரவி! அது வெறும் மலிவுப்பதிப்பல்ல; விசேட கலைப்பதிப்பு! சிலம்பிலே நடனம்; சிந்துபைரவியில் இசை!

இன்றைய நெருக்கடி நிலையில் 'சிந்துபைரவி' தரும் பாடம் என்ன? கொடுமைகள் கண்டு கொந்தளிப்படைகிறார்கள்; உணர்ச்சிவசப்படுகிறார்கள்; துடிக்கும் கரங்கள் பல இதனை இதனால் முடிப்பவர்கள் அதனைச் செய்யட்டும்!

ஏனையவர்கள் செய்வதறியாது ஏங்கித் தவிப்பதில் என்ன பயன்? அடுத்ததென்ன, முடிவென்ன, அங்கென்ன, இங்கென்ன எனக் கடமை மறந்து அலைவதில் பயனுண்டோ?

பயனுள்ள தொழிற்பயிற்சி சிறிய கைத்தொழில் முயற்சிகள் - உணவுற்பத்தி - உள்ளூர் உற்பத்திப் பொருள் ஊக்குவிப்பு - அகதிகளுக்கு மறுவாழ்வு - இப்படிக் கடமைகள் ஏராளம்! ஏராளம்!.

சிந்துபைரவி - ராகம்புரிகிறதா? உணர்ச்சிக்கு அறிவு என்னும் கடிவாளம் பேடு; கடமையைக் கவனி! உனது தாய் மண்ணுக்கு நீ செய்யவேண்டிய பணியைச் செய்.

அன்புடன் — சிவா —

சமபலம் இல்லையெனினும்

# யுத்த உத்தியால் தமிழர்சேனை அவதானமாக முன்னேறியது

கீழைத்தேச வாணிகத்தில் ஈடுபட ஆசையுற்று - அதற்கான கடல் மார்க்கத்தைக் கண்டறிந்து கரையேறி - பண்டமாற்று வாணிகத்தில் பெருவாரி நயம் பெற்று - பின்னர் நப்பாசை மேலுற்று நாடு பிடிக்கத் திட்டம் - தீட்டி நம்பிக்கெட்ட மன்னர்களை நயவஞ்சகமாய்க் குப்புற வீழ்த்தி-பிறநாடுகளை மெல்ல மெல்ல விழுங்கி வந்த கள்ள நரிக் கூட்டமாம் வெள்ளைப் பறங்கியருக்கும், வேங்கை நிகர் நல்லூர்ப் பெருஞ்சேனைக்கும் போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது...

டுமீல்! டுமீல்! டுமீல்... பறங்கிப்படை துப்பாக்கி வேட்டுகளைத் தீர்க்கிறது. பறங்கிப்

கிப் படையை நோக்கி ஈட்டிகளை வீசுகிறார்கள். பாய்ந்து சென்ற ஈட்டிகள் பறங்கியர் சிலரை மாய்த்து வீழ்த்துகின்றன ...

டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்... மீண்டும் பறங்கியர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்க்கின்றனர். நல்லூர் போர் வீரர்களுக்கு உயிர்ச்சேதம்

நல்லூர் சேனைக்கு உயிரிழப்பும் தொடர்கிறது சிரமம்

பறங்கியரின் துப்பாக்கி வேட்டு வெகுதூரம் பாய்வதால் நல்லூர்ச்சேனை பறங்கிப் படையை நெருங்குவது சிரமமாக இருக்கிறது. கவண்கல்

பற்றுவாயில் நெருப்பு வைத்தாலே அது வெடிக்குமாதலால் அத்தாமதத்தைப் பயன்படுத்தித்தான் தமிழ் வீரர்கள் முன்னேறி கவண்கற்களாலும் ஈட்டிகளாலும் தாக்கி வந்தனர்.

ஆனாலும் பறங்கிய

### பாய்ந்து சென்ற ஈட்டிகள் பறங்கிகள் பலரை மாய்த்தன

படையை நெருங்கிச் சென்று கவண்கல் சுழற்றி வீசிய நல்லூர் போர் வீரர்களில் சிலர் துப்பாக்கி வேட்டினால் உயிரிழக்கின்றனர்.

இது கண்டு கொதித்து கோபாவேசம் கொண்ட சங்கிலி மன்னன், தன் போர் வாளை உருவிக் கையிலெடுத்துக் கொள்கிறான் அவனது கண்கள் நெருப்பைக் கக்குகின்றன ஆவேசமுற்ற ஈட்டிச் சேனையினர் பறங்

ஏற்படுகிறது இதைத் தொடர்ந்து சற்றுப் பதுங்கி முன்னேறிய கவண்கல் சேனையினர் பறங்கிப் படையை நோக்கி கவண்கற்களை சுழற்றியடிக்கிறார்கள் விரைந்து பறந்த கவண் கற்கள் பறங்கியரின் முகங்களைப் பிய்த்தும் மண்டைகளை நொருக்கியும் பதம் பார்க்கின்றன.

டுமீல்! டுமீல்! டுமீல்... பறங்கியரின் துப்பாக்கி வேட்டு தொடர்கிறது.

### ம. க. அ. அந்தனிசில்

விசுவதாலும், ஈட்டி எறிவதாலும் சற்று முன்னேறி பறங்கியரை நெருங்கிச் சென்றுதான் அவ்வாறு செய்ய முடியும் அப்படி நெருங்கிச் சென்ற வீரர்களின் உயிர்களைப் பல சமயங்களில் பறங்கியரின் துப்பாக்கி

ரிடம் நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் இருந்ததால் ஒன்றில்லாவிட்டாலும் மற்றொன்று என்ற வகையில் பறங்கியரால் தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுகள் நல்லூர் போர் வீரர்களின் உயிர்களை அருக்

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி ஏழு-அ)

வேட்டு பதம் பார்த்துவிடுகிறது பறங்கியர் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்து இலக்குப்பார்க்க, இன்னொருவன் அதன்

கடி பதம் பார்க்கத் தவறவில்லை. இந்த நிலையிலும் நல்லூர்ச்சேனை சனைக் காமலும் கலைக் காமலும் சமராடி நிற்கிறது...

மன்னனின் வீரம்

ஆயுதத்தில் சம பலமில்லாவிட்டாலும் வீர தீரத்தில் மேலான பலம் கொண்ட தமிழ்ப்போர் வீரர்கள் சந்தர்ப்பம் கிடைத்தபோது விரைந்து முன்னே பாய்ந்து கவண்கற்களைச் சுழற்றியடிக்கின்றனர் ஈட்டிச் சேனையால் வீசப்பட்ட ஈட்டிகள் பறங்கியர் உயிர் கொல்

டுமீல்... பறங்கியர் துப்பாக்கி வேட்டு தீர்த்த வேளை தூரத்தே நகர்ந்த நல்லூர்ச்சேனை பின்னர் முன்னேறிப் பாய்ந்து கவண்கல், ஈட்டி முதலியவற்றால் தாக்கி விட்டு மீண்டும் பதுங்கிக் கொள்கிறது. இச்சந்தர்ப்பத்தில் ஓரமாகச் சென்று சடுதியாக முன்னேறிய தளபதி வீரமாணிக்கத்தேவன் துப்பாக்கியால் குறிபார்த்து நின்ற பறங்கியொருவனை தன் குத்து வாளை வீசி எமலோகம் போக்கி விட்டு வாயு வேகத்தில் திரும்பி விடுகிறான்...டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!... பறங்கியரின் துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து முழங்குகின்றன. அதில் சிக்கிய தமிழ் வீரர்கள் உயிர் மாள்கின்றனர்.

கவண்கல் வீசுவதன்

### சங்கிலி மன்னன் தனித்து பத்துப்பேரின் தலைகளை வீழ்த்தினான்

கின்றன... இச்சமயத்தில் பறங்கிப் படைக்குள் புயல் வேகத்தில் தன் புரவிமீது ஊடறுத்துச் சென்ற சங்கிலி மன்னன் மின்னலென்னத் தன் போர் வாளைச் சுழற்றி பத்துக்கும் மேற்பட்ட பறங்கியரை வெட்டி வீழ்த்தி விட்டு விருட்டெனத் திரும்பி விடுகிறான்

டுமீல்! டுமீல்! டுமீல்,

மூலம், துப்பாக்கி ஏந்திக் குறிபார்க்கும் பறங்கியரை நிதானம் தவறவும், நிலை கலங்கச்செய்யவும், காயப்படுத்தவும் முடியுமே தவிர அவற்றால் உயிர்ச்சேதம் ஏற்படுத்த முடியாது. ஈட்டிகளை விட்டெறிந்து தாக்குவதனால் எத்தனை ஈட்டிகளென்று வீசுவது? அதிலுடன் நல்லூர்ப் படை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பங்கும் முக்கியம் என்று இயக்கங்கள் உணர்கின்றன

ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) முக்கிய பிரமுகர் திரு. ஆர். சங்கர்.

விவசாய என்ஜினியரான திரு சங்கர், ஈரோஸின் ஆரம்பகால உறுப்பினர் மத்திய கிழக்கின் யுத்தகளங்களில் பங்கு பற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு.

ஈரோஸின் இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான திரு. சங்கர், ஈரோஸின் சர்வதேச ஒற்றுமை அமைப்பின் முக்கியஸ்தராகவும் இருக்கிறார்

திம்பு பேச்சுக்களின் போது ஈரோஸின் பிரதிநிதிகளில் ஒருவராக இவர் கலந்து கொண்டார்.

நள்ளிரவுப் பயணம் மேற்கொண்டு சென்னை வந்த இந்திய அமைச்சர் குழுவுடன் ஈரோஸ் பிரமுகர் வி பாலகுமாருடன் சேர்ந்து இவரும் பேச்சுக்களை நடத்தினார்.

"சற்றடே ரிவியூ" வின் 13-9-1986 இதழில் சென்னையில் இருந்து அதன் சிறப்புச் செய்தியாளர் அனுப்பிப் பிரசுரமான பேட்டியின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: தேசிய விடுதலைப் போராட்டம் ஒன்றுக்கு ஐக்கிய முன்னணி அவசியம் ஐக்கிய முன்னணி அல்லது தேசிய ஜனநாயக அமைப்பு ஒன்று உருவாவது குறித்த தற்போதைய சூழ்நிலை அவ்வளவு பிரகாசமானதாக இல்லையே. உங்களுடைய கருத்து என்ன?

பதில்: நானும் இதை ஏற்றுக் கொள்கிறேன். உண்மையில் ஈரோஸ் இயக்கம் போராட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே இதற்காக உழைத்து வருகிறது மூன்று அமைப்புக்களினையே ஒரு இணைக்கத்தை ஏற்படுத்த நாம் பிரதான பங்கு வகித்தோம் ஈ. பி. ஆர், எல் எப் ரெலோ, ஈரோஸ் ஆகியவையே அந்த 3 இயக்கங்களும்

தமிழீழ விடுதலைப்புலிகளையும் இந்த அமைப்பில் கொண்டு வந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணியை அமைக்கும் முயற்சியிலும் நாம் ஈடுபட்டோம்.'புளொட்'டும் வரும் என்று நம்பினோம். இந்த அமைப்பின்

கீழ் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டது.

திம்புவுக்குச் சென்ற தூதுக்குழுக்கள் ஒரு ஐக்கிய முன்னணி என்ற மாதிரி செயல்பட்டன. அது ஒரு சாதனை

திம்புப் பேச்சுக்கள் முறிந்தன அதைத் தொடர்ந்து இரண்டு அமைப்புக்களிடையே ஏற்பட்ட மோதலில் தோழர் சபாரத்தினம் (ரெலோ) கொல்லப்பட்டார். இவை ஐக்கிய முன்னணி அமைப்பில் புதிய அச்சம் ஒன்றைப் புகுத்தியது

எந்த விடுதலைப் போராட்டத்திலும் பல்வேறு அமைப்புகள் பல்வேறு சிந்தனைகளுடன் உருவாக்கப்படுகின்றன. போராட்ட காலத்தில் சில இல்லாமற் போகின்றன;சில அழிக்கப்படுகின்றன.

தற்போதைய சூழ்நிலையில் காணப்படும் சரித்திரரீதியான சில உண்மைகள், அமைப்புகளிடையே ஒரு இணைக்கத்தை உருவாக்க உத

வும் என்று நாம் நம்புகின்றோம் அண்மைக் கால நிகழ்வுகள் அப்படியான ஓர் ஒற்றுமையின் அவசியத்தைக் காட்டுகிறது.

புதுடில்லியில் எடுக்கப்பட்டு வரும் சில நடவடிக்கைகள் ஆரம்பத்தில் அமைப்புக்களிடையே ஒரு இணக்கத்தைக் கொண்டு வரும் என்று நம்புகிறோம். கடைசிக் கட்டத்தில்

என்று கூறப்படுவது உண்மை. அகிம்சை வழியான அரசியல் அமைப்பைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் வயது போனவர்கள் இயங்குகின்றனர்.

ஆயுதந்தாங்கிய போராட்டத்தை இளைஞர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். அதனால் தலைமைத்துவத்தில் இளைஞர்களின் ஆதிக்கம் இருக்கின்றது.

### ஈரோஸ் சங்கரின் பேட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதற்குள் கொண்டு வரப்படும்.

கேள்வி: எல்லாப் போராளி அமைப்புக்களுக்கு ஏறக்குறைய இளைஞர்களின் கட்டுப்பாட்டில் தான் தற்போது உள்ளன. மக்களைத் திரட்டுவது சம்பந்தமான தங்களின் எதிர்கால நடவடிக்கை என்ன?

[illegible] போராளி அமைப்புக்கள் இளைஞர்களினால் வழி நடத்தப்படுகின்றன

இந்த ஏற்றத்தாழ்வு நீக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

மக்களை அடிப்படையாகக் கொண்ட பல அமைப்புக்களை நாம் அமைத்துள்ளோம். ஈழவர் முன்னணியும் எமது அமைப்பு இளைஞர்களுடன் சாதாரண மக்களையும் போராட்டத்தில் பங்குபற்றச் செய்வதில் ஈழவர் முன்னணி உழைக்கிறது. [illegible] திட்டம் விஷயத்தில், மக்கள் விடுதலைக்காக உழைப்பவர்

களாக தாங்கள் மட்டும் இருக்க முடியாதென்பதை பெரும்பாலான அமைப்புக்கள் உணர்ந்துள்ளன.

மக்களும் பங்குபற்றத் தொடங்கினால் பார்வையாளர்களாக அவர்கள் இருக்க முடியாது

கிழக்கில் சுலபமல்ல

கேள்வி: கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அவ்வளவு அமைதி நிலவுவதாக இல்லை. கிழக்குப்பகுதியில் இடம் பெறும் நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் ஈரோஸ் தான் முன்னணியில் நிற்பதாகச் சொல்லப்படுகிறது கிழக்கில் வெகுவிரைவில் அரசியல், இராணுவ ரீதியாக மாற்றம் ஏதும் வரும் என்று உணருகிறீர்களா?

பதில்: ஆம், நிச்சயமாக கிழக்கில் சச்சரவுகள் ஏற்படலாம் என்று கருதப்படும் இடங்களில் ஈரோஸ் தீவிர அக்கறை எடுத்து உள்ளது-

100 சதவீதம் தமிழர்களைக் கொண்ட யாழ்குடாநாடு தமிழர்களுடையதே என்று நாம் ஆரம்பத்தில் இருந்து

கருதி வந்துள்ளோம்-

இராணுவ மோதல்கள் எழக்கூடிய பகுதிகளும் உள்ளன- கிழக்கும் அப்பகுதிகளில் ஒன்று- அங்கு எமது நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும்-

கிழக்கு மாகாணத்தில் பூகோள ரீதியான, கேந்திர ரீதியான கஷ்டங்கள் உள்ளன- அரை விடுதலை நிலை யாழ் குடாநாட்டில் உள்ளது- அந்த நிலையை கிழக்கில் ஏற்படுத்துவது இலகுவான வேலை அல்ல-

தற்போதைய பேச்சுக்கள் தோல்வி கண்டால் நிச்சயம் அரசாங்கம் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்துவது தவிர்க்கமுடியாததாகிவிடும். எமது புலனாய்வு அறிக்கைகளும் இதை உறுதிப்படுத்துகின்றன

கிழக்கில்தான் குறிப்பாக பெருத்த மோதல் ஏற்படும்

இக்கட்டத்துடன் கிழக்கு மாகாணத்தின் அரசியல், இராணுவ நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்படும். இது எனது அபிப்பிராயம்

மிதவாதிகள் பங்கு

கேள்வி: மிதவாதிகளின் குரல் குறித்து தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைமைத்துவம் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழர் சார்பாக சலுகைகள் குறித்து கடந்த 30 ஆண்டுகளாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர் இது சரித்திர ரீதியானது.

தற்போதைய நிலையில் அவர்கள் எம் பிக்கள் அல்லர் உண்மையில் தீவிரமாகச் சொல்லப் போனால் அவர்கள் அரசியல் கட்சியாகவோ, இயக்கமாகவோ இயங்கவில்லை

பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண்டும் என்பதில் இந்திய அரசு வகிக்கும் சிக்கலான பங்கில் தமிழ்த் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக கூட்டணி கருதப்படுகிறது.

தமிழ்த் தலைமைத்துவத்தை அவர்கள் பிரதிபலிக்கவில்லை என்று பல முறை சொல்லிவிட்டோம்.

தமிழ் பேசும் மக்களின் பெரும்பாலான அபிலாஷைகளுக்குக் குறைவான தீர்வு ஒன்றுக்கு கூட்டணியினர் சம்மதித்து விடுவர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

சைவாசிரிய கலாசாலை 1928 ஆம் ஆண்டில் விஜயதசமி நாளில் ஆரம்பிக்கப் பெற்ற போது, பேராசிரியர்களாக நியமனம் பெற்றவர்களும், பகுதிநேர விரிவுரையாளர்களாக வந்து பாடஞ் சொன்னவர்களும் அக்காலத்துச் சைவத்தமிழ் வல்லுனர்களில் ஒரு சிலராவார்.

அவர்களுள் "அதிபனாய் முதலில் வந்தான் அமைந்த நற்குணமும் கல்வி நிதியமும் படைத்தோன் கிருஷ்ண பிள்ளையாங் கரவை வாசன்", என்று கலாசாலைப் புராணம் பாடிய பண்டிதர் சு. இராசையா கூறியாங்கு வந்த கிருஷ்ண பிள்ளை அவர்கள், ஆங்கில ஆசிரியர்க்கான பயிற்சி பெற்றவர், பெரிய பாடசாலையொன்றில் ஆசிரியராயும், அதிபராயும் இருந்து அநுபவம் பெற்றவர், அருங்குணங்கள் அமையப் பெற்றவர், பிற்காலத்தில் பாடசாலைப் பரிசோதகர் என்னும் கல்வி அதிகாரியாய் இருந்தவர்

## தமிழ் பேராசிரியர்

தமிழ்த்துறைக்கு முதற்பேராசிரியராய் வந்தவர் வவுனியாவைச் சேர்ந்த சுப்பிரமணியர் இராசஐயனார் என்னும் மதுரைத் தமிழ்ப் பண்டிதராவர் இவர் ஆங்கிலத்தில் கேம்பிரிஜ் சீனியர் உதவி ஆசிரியராயிருந்தவர். மகாதேவா அவர்கள் இராசையனாரிடம் தமிழ் படிக்க முயன்ற போது, ஆசிரியரின் கடுந் தமிழ் விளங்கிக்கொள்ள முடியாமல் அம் முயற்சியைக் கைவிட்டவர்.

இராசையனார் வேதாசலம் என்னும் மறைமலை அடிகளாரின் தனித்தமிழ்

## சைவாசிரிய கலாசாலையின் முதற் பேராசான்கள்

யா பரீட்சையிலும் சித்தி பெற்றவராகையால் ஆங்கிலப் புலவர்களையும் நன்கறிந்தவர். இலங்கையில் பண்டிதர்களானோருள் முதலில் பட்டம் பெற்றவர் மட்டக்களப்பைச் சேர்ந்த மயில்வாகனம் என்னும் பூர்வாசிரமப் பெயர் பெற்ற விபுலானந்த சுவாமிகளாவர் அவருக்குப் பின் பண்டிதரானவர் வ சு. இராசையனாராவார். இவர் சில காலம் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர் இராமநாதன் மெச்சும் வகையில், சேர் மகாதேவா அதிபராயிருந்த காலத்தில் இலக்கியத்தில் ஈடுபட்டுத் தமிழ் பேசியும் எழுதியும் வந்தவர். இவரின் தூய தமிழ் உரையாடல் அக்காலத் தவருக்குப் பெருவிருந்தாய் இருந்தது. வதுவை அயர்தல், குடமுழுக்கு, நன்றி நவிலர், விருந்து ஓம்புதல், வெண்பொற்காசு முதலிய சொற்களை வெண்கலக் குரலில் கணீர் கணீர் என ஒலித்துப் பேசும் வழக்கம் உள்ளவர் அஞ்சா நெஞ்சங் கொண்ட வீர வன்னியரான அவர், எவருக்கும் அவசரமின்றிப் பணியாத வராயும் இருந்தார். பிற்காலத்தில் அரசினர் பாடசாலைகளில் கற்பித்து நாடெங்கும் கண்டவர். அவர் பூண்டுலோயாவில் நிலையாகப் பல்லாண்டு அதிபராயிருந்தவர்.

## சம்பலும் பாணும்

அதிகாரிகளின் மிரட்டல், கண்டித்தல் முதலியவைக்கு அஞ்சாத இவர், ஒரு சமயம் பாடசாலைப் பரிசோதகர் இவரைப் பார்த்து, "என்ன நீங்கள் ஒவ்வொரு நாளும் பாணும் சம்பலும் கொடுத்ததாக மதிய உணவு அறிக்கையில் எழுதுகிறீர்கள்?" என்று கேட்டார். உடனே இவர் தாமதிக்காமல், இனிமேல் சம்பலும் பாணும் என்று எழுதலாம்" என்றார்.

இவரின் பெருங்குணங்கள் அதிசயமானவை சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை நன்கு நடைபெறச் செய்தவர். இவர் மறைந்தபின் இவருடைய பெருமையைப் பேணும் வகையில் இவரின் இல்லத்தரசியார் இவரின் செந்தமிழ், வடமொழி, ஆங்கில நூல்கள் ஆயிரக்கணக்கானவையை யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்கு அன்பளிப்பாக உதவியதோடு ஏற்றிச் சென்ற லொறியின் கூலியையும் கொடுத்தவர்.

சைவாசிரிய கலாசாலையை அலங்கரித்த முன்னோடிகளுள் தம்பிப் பிள்ளை என்பாரும் ஒருவர். இவர் பயிற்றப் பெற்ற தமிழாசிரியராய் இருந்ததோடு பாலபண்டித பரீட்சையிலும் சித்தி பெற்றிருந்தார். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தார், சேர் இராமநாதன் அவர்களின் மத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

★ க. சி. குலரத்தினம் ★

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## ரோமக் குடியரசு சாம்ராஜ்யமாக மாறுகிறது

(இறுதிப் பகுதி)

ரோமாபுரியின் சரித்திரத்தில் முக்கியமான மாறுதல் நிகழும் ஓரிடத்துக்கு இப்போது நாம் வந்து விட்டோம். அதாவது, குடியரசு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் காலம். கி.பி. 27 ஆம் ஆண்டில் 'அகஸ்டஸ் சீசர்' என்னும் பெயர் புனைந்து ஆக்டேவியன் அரசன் ஆனான்

ரோமாபுரியின் கதையையும் ரோம சக்கரவர்த்திகளின் கதையையும் தொடர்ந்து கூறுமுன் குடியரசின் கடைசி நாட்களில் ரோம ராஜ்யம் எவ்வாறு இருந்ததென்று உற்று நோக்குவோம்.

ரோமாபுரியின் ஆளுகையில் இத்தாலியும், மேற்கில் ஸ்பெயின், கால் (பிரான்சு) ஆகிய தேசங்களும், கிழக்கே கிரீஸ், சின்ன ஆசியா ஆகிய தேசங்களும் இருந்தன. சின்ன ஆசியாவில் பெர்கமம் என்ற கிரேக்க இராஜ்யம் இருந்தது உனக்கு நினைவிருக்கலாம்.

வட ஆபிரிக்காவில் எகிப்து தேசம் ரோமுக்கு துணை நாடாக அதன் பாதுகாப்பில் இருந்து வந்தது.

கார்தேஜும் மத்திய தரைக் கடல் நாடுகளின்

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

வேறு சில பாகங்களும் அதன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

ஆகவே ரைன் நதி ரோம இராச்சியத்தின் வட எல்லையாக அமைந்து கிடந்தது.

ஜேர்மனி, ருஷியா தேசங்களைச் சேர்ந்தவர்களும், வட மத்திய ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களும் மெசபொடேமியாவுக்கு கிழக்கே வாழ்ந்தவர்களும் ரோம ராஜ்யத்திற்கு வெளியே இருந்தார்கள்.

அக்காலத்தில் ரோமபுரி பெருமை பெற்று விளங்கிய தென்பதில் ஐயமில்லை. ஆனால் பிற நாடுகளின் சரித்திரங்களை அறியாத பல ஐரோப்பியர் ரோம் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி வந்தது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இது உண்மையல்ல. இதே சமயத்தில் சீனாவை ஆண்டு வந்த ஹான் வமிசத்தார் ஆசியாவின் கீழ்க்கோடியிலிருந்து மேற்கே காஸ்பியன் கடல் வரையில் ஆணை செலுத்தி வந்தனர்.

மெசபொடேமியாவில் கரே எனுமிடத்தில் நடந்த சண்டையின்

6ஆம் பக்கம் பார்க்க)

# இருண்ட காலத்தை நோக்கி தமிழ் நாவல்கள் திரும்பின

பகுதி II

அச்சுசாதனம் தமிழகத்தில் நிலைபெற்றுப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பிறகு கூட வெகு நாட்களுக்கு உரைநடையில் புனைகதைப் படைப்புகளுக்கு அங்கீகாரமும் அந்தஸ்தும் கிடைக்கவில்லை.

வேதநாயகம்பிள்ளை, ராஜமையர், மாதவையா போன்ற அறிஞர்கள் புனைகதைப் படைப்பு இகழ்ச்சிக்குரியதாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. இதற்கு ஒரு காரணம் கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல மலிவான ஆங்கில நாவல்கள் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் கூட ஊடுருவியிருந்தது தான். அன்று இவற்றைத் தபால் மூலம் தருவிப்பது எளிதாகவும் அதிக செலவு இல்லாததாகவும் அமைந்திருந்தது

இந்தப் பதிப்புகள் அனைத்திலும் பிறநாவல்களின் பட்டியலும் விலையும் கிடைக்குமிடமும் தவறாமல் இடம் பெற்றன. ஆதலால் ஒரு குக்கிராமத்தில் வசித்தவர் கூட மேன்மேலும் நாவல்களைத் தருவித்துப் படிக்கலாம். அன்று ஆங்கிலம் படித்தவர் நாவல் படிப்பது வெகு இயல்பான பொழுது போக்காக இருந்திருக்கிறது

அதே நேரத்தில் நாவல் அல்லது புனைகதை பற்றிப் படித்தோர் படியாதோர் அனைவர் மத்தியிலும் பொதுவாக ஓர் அபிப்பிராயம் நிலவியது. புனைகதை படிப்பது விரும்பத்தக்கதல்ல. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் ஆங்கிலம் படித்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்த நாட்களில் அவர்கள் அனைவராலும் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவர்களாகவும் அனைவரின் கவனத்தையும் பெறுபவர்களாகவும் இருந்திருக்க வேண்டும்

அவர்களுடைய நடத்தை பழக்க வழக்கங்களில் சிறு வேறுபாடுகள் இருந்தால் கூட அவை அனைத்தும் ஆங்கிலப் படிப்பினால் தான் என்று பிறர் நினைத்துக் கொள்வது எளிது. அக்காலத்தில் வந்து குவிந்த ரெயினல்ட்ஸ் நாவல்கள் பொதுவாக, புனைகதைக்கு மரியாதை தேடித்தரவில்லை.

தமிழில் என்று மட்டுமல்லாமல் பிற இந்திய மொழிகளிலும் உரைநடை புனைகதை இலக்கியத்தின் தொடக்கம் ரெயினல்ட்ஸ் நாவல்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாயிருந்தது

இன்று ரெயினல்ட்ஸ் நாவல் ஒன்றைப் படிக்கும் பொழுது எழுபத்தெண்பது ஆண்டுகள் முன்பு இந்தியாவில் அந்த நாவலாசிரியரின் படைப்புகளுக்கு இருந்த பரபரப்பையும் அருவருப்பையும் உணர்ந்து கொள்வது சிறிது கடினமாகத் தான் இருக்கிறது மேல் நாட்டு மக்களை அவர்களுடைய பலவீனமான தருணங்களிலேயே பாத்திரங்களாகப் படைத்திருக்கும் ரெயினல்ட்ஸ் ஒரு விதத்தில் பிரான்சு நாட்டு பால்ஜாக் என்றால் மிகவும் மதிப்பு வாய்ந்த எழுத்தாளரை ஒத்திருக்கிறார் அதே நேரத்தில் அவர் பால்ஜாக் பெற்றிருக்கும் இலக்கிய அந்தஸ்தையும் பெறுததற்குக் காரணம் புரிகின்றது

அடுத்தடுத்துப் பரபரப்பூட்டும் சம்பவங்களாகக் குவித்த ரெயினல்ட்ஸ் தமிழ் மொழியின் புனைகதை வரலாற்றில் இடம் பெறுவது பரிணாமத்தின் ஒரு விநோதமான இடைச் செருகலாகும்.

இறக்குமதி செய்யப்பட்ட பாமர ரஞ்சகமான நாவல்கள், தமிழ் நாவல்களின் போக்கை மாற்றின

புதுமை, லட்சியம், சமூக சீர்திருத்தம் என்ற படிப்பாளிகளால் நோக்கங்கள் அடிபட்டு சுவாரஸ்யம் என்றும் வாசக நோக்கே நிலைபெறத் தொடங்கி நாவல்கள் எழுதுவது தரக்குறைவான செயல் என்று அறிவு ஜீவிகள் நினைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிவசங்கரி

தமிழக நாவல் இலக்கியம்: அதன் வளர்ச்சியும் தேக்கமும்

## பிரயாணச் செலவுகள்!

சாண் ஏற
முழம் சறுக்கும்
வாழ்க்கைச் செலவில்
நாளும்
வாழ்வை நகர்த்த
போராடும் வேளையில்
இங்கு மட்டும்
மூடு மந்திரம் போல்
முழமேறும்
பிரயாணச் செலவிற்கு
முகம் கொடுக்க முடியாமல்
மனம் தடுமாறும்
எங்கோ! குண்டு விழும்
தொலைவைச் சரிக்கட்ட
இது தான்
வரையறையில் லா
புது முறையா?
அணு குண்டுகளைக் கூட
ஆழ் கடலில் தான்
பரிசோதிப்பார்கள்
ஆனால்; இங்கோ
எங்கள் தலைகளின் மேல்
குண்டுகள்; வந்து வீழ்வது போல்
துண்டுகள் வந்து விழுகின்றன.

நுணுவில் நாகராஜா

## உலகின் இருளைப் போக்கிடுவாய்!

நிலவே நீயும் வருவாயே
நிறைந்த ஒளியைத் தருவாயே
உலகின் இருளைப் போக்கி எங்கள்
உள்ளம் குளிரச் சிரிப்பாயே!

வெள்ளிப் படகாய் விண் கடலில்
துள்ளிக் குதித்து விரையும் நீ
அள்ளிச் சொரியும் பாலொளியில்
அழகாய் நீந்திக் களிப்போமே

அல்லிக் கொடியாள் சிரித்திடவே
அசைந்தே பவனி வரும் உன்னை
மெல்லக் காட்டி அன்னை அவள்
பிள்ளைக் கமுது ஊட்டிடுவாள்

தங்கப் பிளம்பாய் ஒளி சிந்தும்
திங்கள் நீயும் வானேகப்
பொங்கும் கடலும் சிறுவருளம்
எங்கும் மகிழ்வு அலைமோதும்!

நெடுந்தீவு லக்ஷ்மன்

## ஒரு நிமிடத்தில் என்ன நடக்கும்?

எங்களில் பலர் நேரத்தை அசட்டை செய்வதைக் காண்கிறோம் குறிப்பிட்ட நேரத்தில் எம்மவர் தமது காரியங்களை முடிப்பதில்லை. மாலை 4 மணிக்குக் கூட்டமென்றால் 5 மணிக்குத்தான் மக்கள் வந்து சேர்வார்கள் சிலர் சொஞ்சம் பொறுங்கள் என்று நேரத்தை வீணடிப்பார்கள். ஆனால் நேரம் பொன்னானது. விலைமதிப்பற்றது என்பதை அறிஞர்கள்தான் வற்புறுத்தி வருகிறார்கள்

சமீபத்தில் ஜெர்மன் நிபுணர் ஒருவர் ஒரு நிமிடத்தில் என்ன நடக்கின்றது என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

ஒரு நிமிடத்தில் 60 விநாடிகள் உண்டு. உலகத்திலுள்ள 400 கோடி மக்கள் இந்த ஒரு நிமிட காலத்துக்குள் எவ்வளவோ செயல்களைச் செய்து விடுகின்றனர். பூமியை நோக்கி 6,000 விண்கற்கள் பாய்கின்றன பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதில் 950 மைல் தூரம் கடந்திருக்கும்.

சுமார் 38 புயல்கள் உலகின் பல பாகங்களிலும் வீசியிருக்கும். நதிகளோ ஒரு நிமிடத்திற்குள் 35 ஆயிரம் தொன் வண்டலையும் தண்ணீரையும் கடலில் சேர்த்திருக்கும்.

ஒரு நிமிடத்தில் சுமார் 100 பேர்கள் மாண்டிருப்பர். குழந்தைகளோ 114 பிறந்திருக்கும். திருமணங்கள் 34 நடைபெற்றிருக்கும். தொலைபேசி அழைப்புக்கள் 2,80,000 கூப் பிடப்பட்டிருக்கும் புகைபிடிப்பவர்கள் 60 லட்சம் சிகரெட்டுக்களை ஊதித் தள்ளியிருப்பர்.

ஒரு நிமிடத்தில் 1,10,000 பத்திரிகைகள் வாசிக்கப் பட்டிருக்கும். மதுப்பிரியர்களோ 38,000 கலன் மதுவை மாத்தியிருப்பர் மனிதர் 4,000 தொன் உணவுப் பொருள்களை உட்கொண்டிருப்பர். இந்த ஒரு நிமிடத்தில் 8,000 தொன் நிலக்கரி எரிக்கப்பட்டிருக்கும். நிலத்திலிருந்து 700 தொன் இரும்பு, எஃகுப் பொருள்கள் எடுக்கப்பட்டிருக்கும். புதிய மோட்டார் கார்கள் 68 உலகில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும்.

பூ! இவ்வளவுதானா. சற்றுக்குறைவாக இருக்கிறதே என்று எண்ணுகிறீர்களா? ஒரு நாளிலல்ல; ஒரு மணித்தியாலத்திலல்ல; ஒரே ஒரு நிமிடத்தில்தான் இவை நிகழ்கின்றன.

புத்தொளி

# விசித்திர நண்பரிடையே விளைந்த விபரீதம்!

(பகுதி இரண்டு)

கிழட்டு நரியுடன் போராடித் தப்பினேன் பிழைத்தேன் என்று ரொட்டி குடிசைக்கு ஓடி வந்தது குடிசையிலோ எல்லாமே தாறுமாறாக இருந்தன.

சுண்டெலியார் சூப் தயாரிக்கப் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார். இருந்தும் மணமோ சுவையோ வரவே இல்லை.

'ஓ! சூப்பிற்குச் சுவை சேர்க்க பானைக்குள் குதிக்க வேண்டுமென்று ரொட்டியார் கூறினாரே. நானும் அப்படியே செய்ய வேண்டும்' என்று கூறிக்கொண்டே சுண்டெலி சூப் கொதிக்கும் பானைக்குள் குதித்தது. உடலெல்லாம் வெந்துவிட துடிதுடித்தபடியே வெளியே பாய்ந்தது. உரோமங்கள் உதிர்ந்தன வால் நடுங்கியது. சுண்டெலி வாங்கில் அமர்ந்து கொண்டு கண்ணீர் விட்டு அழுதது.

விறகு சேகரித்து வந்த சிட்டுக்குருவி அவற்றைக் கொத்த ஆரம்பித்தது. அதனுடைய சொண்டுகள் வளைந்து முறிந்து கொண்டன. வாயைத் திறக்க முடியாத நிலையில் குடிசைக்குள் வந்தது.

அங்கே தோலுரிந்த சுண்டெலி வால் நடுங்க கண்ணீர் விட்டு அழுதபடியிருந்தது ரொட்டியின் உடம்பில் ஒரு பகுதியைக் காணவில்லை.

மூன்றும் ஒன்றையொன்று பார்த்துப் பெரிதும் வருந்தின.

'உங்களுடைய வேலையை வேறொருவரின் தோளிற் சுமத்திவிட்டு வேறொருவரின் வேலையை நீங்கள் செய்யப்போனால் இதுதான் நடக்கும்' என்றது ரொட்டி.

இதனைக் கேட்டு வெட்கமடைந்த சிட்டுக்குருவி தத்தித்தத்தி வாங்கின் அடிக்குச் சென்றது. முன்னரைப் போலவே அவை மூன்றும் தத்தம் வேலைகளைச் செய்துகொண்டு ஒற்றுமையாக வாழ்வதெனத் தீர்மானித்தன.

சிட்டுக்குருவி மூவருக்கும் உணவு சேகரிக்கப் பறந்தது. சுண்டெலி விறகு கொத்தப் புறப்பட்டது ரொட்டியோ சூப்பும் கூழும் சமைக்கத் தயாரானது.

அவரவர் வேலையை அவரவரே செய்ய வேண்டும். அப்போதுதான் அது சிறப்பாகவும் அழகாகவும் அமையும். இல்லையேல் 'நாய் பார்த்த வேலையைக் கழுதை பார்த்த மாதிரி' என்பது போலத்தான் வரும்.

நன்றி: சோவியத் நாடு.

ரஷ்ய நாட்டுக் கதை




## பயனுள்ள பத்துக் கேள்விகள்

செல்வி மேனகா புவனபூஷணம்
(வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

1. இலத்திரன்களையும் புரோத்திரன்களையும் கொண்ட அணுவின் மையப்பாகம் எது?
2. ஒரே அணு எண்ணையும் ஆனால் வெவ்வேறு அணுநிறைகளையும் கொண்ட மூலகங்கள் எப்படி அழைக்கப்படும்?
3. காரீயம், வைரம், நிலக்கரி ஆகியவற்றில் உள்ள மூலகம் எது?
4. உருக்கைக் கண்டு பிடித்தவர் யார்?
5. ஒரு பாயியினுள் ஏதேனும் ஒரு புள்ளியில் ஒரு அமுக்கம் பிரயோகிக்கப்பட்டால் அது பாயி முழுவதும் சமனாக எல்லாத் திசைகளிலும் ஊடுகடத்தப்படும் என். இவ்விதி எவ்வாறு அழைக்கப்படும்?
6. ஆகாய விமானம் செய்ய உபயோகிக்கப்படும் உலோகக் கலவை எது?
7. சார்புக் கொள்கையைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
8. ஒரே கலத்தைக் கொண்ட உயிருள்ள உடலுக்கு உதாரணம் கூறுக
9. ஒரு குரோமசோமில் பரம்பரை இயல்பை நிர்ணயிக்கும் சிறிய பகுதியின் பெயர் என்ன?
10. கணிதத்தில் மடக்கையைக் கண்டுபிடித்தவர் யார்?

விடைகள்

1) கரு 2) சமதானிகள் 3) காபன் 4) பெசிமர் 5) பாஸ்கல் 6) டியுறலுமின் (Duralumin) 7) ஐன்ஸ்ரீன் 8) அமீபா 9) ஜீன் (Gene) 10) நாப்பியர்

# உண்மை கூறிய போதிலும் அபராதம் செலுத்தி அழுத காந்தி

ஏழாவது வகுப்பிலே அந்தச் சிறுவன் படித்துக்கொண்டிருந்தான். அவன் பார்ப்பதற்கு மிகவும் வேடிக்கையாக இருப்பான் உடம்பு துரும்புபோல் இருக்கும் மூக்கு அகலமாயிருக்கும் ஆகையால் மற்ற மாணவர்கள் அவனை அடிக்கடி கேலி செய்வார்கள் இதனால் அவன் யாருடனும் சேர மாட்டான். கடுமையான வரை ஒதுங்கியே இருப்பான்

அவன் படித்த பள்ளியில் தினசரி மாலைவேளையில் தேகப்பயிற்சி வகுப்பு நடைபெறும். அந்த வகுப்பிற்கு ஒவ்வொரு பையனும் கட்டாயம் வரவேண்டும் இல்லாவிட்டால் தலைமை ஆசிரியர் சும்மா விடமாட்டார். அவர் மிகவும் கண்டிப்பானவர்!

சனிக்கிழமை காலையில் மட்டும்தான் பள்ளிக்கூடம் உண்டு. பிற்பகலில் கிடையாது. ஆனால், அன்றுகூட மாலையில் தேகப் பயிற்சி வகுப்பு உண்டு. எல்லாரும் சரியாக நாலுமணிக்கு அங்கு வந்துவிடவேண்டும்.

அன்று ஒருநாள்.

மணிநாலுக்கு மேலாகிவிட்டது ஆனாலும் அவன் "இன்னும் நேரமாகவில்லை" என்று நினைத்துக்கொண்டே சாவதானமாகப் பள்ளிக்குப் புறப்பட்டான் பள்ளியை நெருங்கியதும் அவன் திடுக்கிட்டான். ஏன்? தேகப்பயிற்சி வகுப்பு முடிந்து எல்லாப் பிள்ளைகளும் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள் பாவம், அந்தச் சிறுவன் ஏமாற்றத்துடன் வீடுவந்து சேர்ந்தான்.

மறுநாள், தலைமை ஆசிரியர் அந்தச் சிறுவனிடம் "நேற்று ஏன் தேகப்பயிற்சி வகுப்பிற்கு வரவில்லை?" என்று கேட்டார்.

அவன் நடந்ததை நடந்தபடி கூறினான். ஆனால் அவன் பேச்சை தலைமை ஆசிரியர் நம்பவில்லை ஓர் அணாவோ, இரண்டு அணாவோ அபராதம் விதித்தார்.

'ஐயோ! அபராதம் கட்டவேண்டுமே!' என்று அந்தச் சிறுவன் கவலைப்படவில்லை; ஆனால் 'ஐயோ, தலைமை ஆசிரியர் நான் பொய் சொல்லுகின்றேன் என்றல்லவா நினைத்துவிட்டார்' என்று தான் எண்ணி வருந்தினான்.

உடனேயே அவனுக்கு அழுகை வந்துவிட்டது.

'நான் கவனக் குறைவாக இருந்ததால்தானே இப்படி யாகிவிட்டது. ஒருவன் உண்மை பேசிவிட்டால் மட்டும் போதுமா? போதாது. கவனமாகவும் இருக்க வேண்டும்' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்

அவன் யார் தெரியுமா?

அவன் சிறு பையனாக இருந்தவன் பிற்காலத்தில் பெரிய மகாத்மா ஆகிவிட்டான் அஹிம்சா மூர்த்தி. சத்தியசீலர், இந்தியர் தந்தை என்றெல்லாம் உலகம் போற்றும் உத்தமர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்திஜியின் இளமையில் நடந்ததுதான் மேலே கூறப்பட்ட நிகழ்ச்சி.

ஆகவே, உண்மை பேசி உத்தமனாக வாழ நாம் உறுதி பூணுவோமாக.

நன்றி: - சின்னஞ்சிறுவயதினிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்பாள் ஆலயம்

## நவராத்திரி விழா சிறப்பிதழ்

### துர்க்காதேவி துதி

காலபாவக ஸன்னிபாம் கலிதார்த்த சந்திர சிரோருஹாம்
பாலநேத்ர விபூஷணாம் பயதாயி சிம்ம நிஷேதுஷீம்
சக்ர சங்கக்ருபாண கேடக சாபபாண கரோடிகா
சூலவாஹி புஜாம்பஜே விஜிதாகிலாசுர ஸைநிகாம்

ஸௌவர்ணாம்புஜ மத்யகாம் த்ருநயநாம் ஸௌதாமி நீஸந்நிபாம்
சக்ரம் சங்க வராபயாநி தததிமிந்தோஃகலாம் பிப்ரதீம்
க்ரை வேதாங்கத ஹாரகுண்டலதராம் மாஹிகண்டாத்யைஸ்துதாம்
த்யாயேத் விந்திய நிவாஸி நீம் சசிமுகீம் பார்ச்வஸ்த
பஞ்சாநநாம்

காலாப்ராபாம் கடாக்ஷைரரிகுலபயதாம் மௌளிபத்தேந்
துரேகாம்
சங்கம் சக்ரம் க்ருபாணம் த்ருசிகமபி கரைருத்வஹந்தீம்
த்ருநேத்ராம்
ஸிம்மஸ்கந்தாதிருடாம் த்ருபுவனமகிலம் தேஜஸாபூரயந்தீம்
த்யாயேத் துர்காம் ஜயாக்யாம் த்ருதசபரிவ்ருதாம் ஸேவிதாம்
ஸித்திகாமை

பூதாநி துர்க்கா புவனநாநி துர்க்கா
ஸ்த்ரியொ நரச்சாபி பசுச்ச துர்க்கா
யத்யத்தி த்ருச்யம்கலு வைவதுர்க்கா
துர்க்கா ஸ்வரூபாதபரம் நகிஞ்சித்



### துர்க்காதேவி துதி

ஆனைத்தோல் போர்த்துப் புலியினுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்ருயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்

வரிவளைக்கை வாளேந்தி மாமகிடற் செற்றுக்
கரிய திரிகோட்டுக் கலைமிசை மேல் நின்ருயால்
அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்ருயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்தவே நிற்பாய்
(சிலப்பதிகாரம்)

பயிரவி பஞ்சமி பாசாங்குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணும் உயர்சண்டி காளி
யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்
செப்புவரே.
(அபிராமி அந்தாதி)

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள்

#### ஆசியுரை

சைவ மெய்யன்பர்களே!

தென்மராட்சி சாவகச்சேரியில் அருளாட்சி புரியும் துர்க்கை அம்பாளுக்கு நவராத்திரி பெருவிழா சிறப்பாக நிகழவிருப்பதறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அவ்வூர் சைவ மக்கள் பெரும் புண்ணியம் செய்தவர்கள். அம்பாளின் திருவடிகளை ஒருமையுடன் இறுகப் பற்றிக் கொண்டால் எல்லா சம்பத்துக்களையும், சௌபாக்கியங்களையும் பெறலாம். தாயல்லவா அவள். நாம் செய்யும் பிழைகளை எல்லாம் பொறுத்து அருள்பாலிப்பாள். பரம் பொருளான சிவனுக்கு ஒரு ராத்திரி விழா. ஆனால் பராசக்திக்கு ஒன்பது நாட்கள் விழா எடுக்கிறோம். இதிலிருந்து அதன் மகிமை பெறப்படும். நவராத்திரி விழாவில் முதலிடம் கொடுத்து முதன் மூன்று நாட்கள் துர்க்கை அம்பாளுக்கே விழாவெடுக்கிறோம். இச்சிறப்பு நிலையும் நோக்கற்பாலது.

இவ்விழாவினை ஒட்டி அன்பர்கள் ஒரு சிறப்பு மலரினை வெளியிடுவதும் பொருத்தமானதாகும். இவ்விழா செவ்வனே நிறைவுற எல்லாம் வல்ல பராசக்தியின் திருவருளைச் சிந்தித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம். இன்பமே சூழ்க. எல்லோரும்வாழ்க.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

## துன்பம் அணுகாது நம்மைக் காக்கும் தூய அரணாக விளங்கும் அன்னை துர்க்கா

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பரமுத்தியாய் நிற்கும் மூலமுதலான பரமேஸ்வரன் சிவபேதமாகவும், சக்திபேதமாகவும் பல்வேறு திருமேனிகளைக் கொண்டு ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப அருள்பாலிக்கின்ருன். சிவனது சக்தி ஒன்றே பரை, ஆதி, இச்சை, ஞானம் முதலாகப் பல்வகை நிலையில் நின்று பயன்தருகின்றது.

எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் அப்பராசக்தி முத்தொழில் புரியும் பொழுது பிராம்மணி, வைஷ்ணவி, ருத்ராணி ஆகின்ருள். ஈசனுக்கு ஒப்பாகும் பொழுது "துர்க்கை" எனப்படுகின்ருள் கல்வியாகக் கருதும் பொழுது கலைமகளாகவும், செல்வமாகத் திகழும் பொழுது திருமகளாகவும், காலஸ்வரூபிணியாகத் திகழும் பொழுது காளியாகவும், இன்பத்தில் பவானியாகவும், துன்பத்தில் பவதாரிணியாகவும் செயற்படுகின்ருள். போகத்தையும், மோட்சத்தையும் ஒருங்கே நல்க வல்லவள் அன்னை பராசக்தியே. "புத்திமுக்திப்ரதாயினி" என்று நூல்களும் இவளைப்போற்றும். பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலானோர் அபய, வரத முத்திரைகளைக் கொண்டே போகத்தையும், வீட்டையும் அளிப்பர். ஆனால் அம்பிகையோ அபய வரத முத்திரைகளைத் தன் திருவுருவில் ஏற்காது தன் திருவடிக் கமலங்களாலேயே அடியார் விரும்பியதற்கும் அதிகமாகவே கொடுக்கின்ருள் என்று சௌந்தர்யலஹரி, அன்னையின் அருளைப் போற்றும்.

"த்வ தன்ய: பாணிப்யா - மபய வரதோ
தைவதகண
த்வமேகா நைவாஸி ப்ரகடித -
வராபீத்யபிநயா
பயாத் த்ராதும் தாதும் பலமபிச
வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானும் தவ ஹி சரணாவேவ
நிபுணௌ
(சௌந்தர்யலஹரி)

#### சக்தி வழிபாடு

சக்தி வழிபாடு தொன்மை மிக்கது மலரும் மணமும் போல, மணியும் ஒளியும் போல சிவமும் சக்தியும் ஒரே தத்துவத்தின் இணை பிரியாத அம்சங்கள் இதனைச் சைவர்கள் "சிவம்" என்பர். சாக்தர்கள்

### வெற்றி பல தரும் அருட்தாய் சாவகச்சேரியில் 'க்ஷிப்ரப்ரசாதினி'யாக அருள் பாலித்து நிற்கும் மகாசக்தி

"சக்தி" என்பர். மும்மூர்த்திகளுக்கும் ஆதாரம் சக்தியே. ஆக்கையைத் தந்து, இன்ப துன்பங்களை நுகர்வித்து, பின் பிறவியை ஒழித்துப் பேரின்ப வீட்டிற் சேர்ப்பவள் அவள் தான்.

"மூவர்க்கும் முதற் பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி நாவிற்கும் மனத்திற்கும், நாடரிய பேரறிவாய்" விளங்குபவள் அன்னை. அவளிடமிருந்து பஞ்ச கர்த்தர்களும், பஞ்சசக்திகளும் தோற்றம் பெற்றன. இதனாலேயே உலகத்தோற்றம் உண்டாயிற்று. "பூத்தவளே! புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே; பின் கரந்தவளே" என்று அபிராமிப் பட்டரும் இந்த அற்புதத்தைப் புகழ்வார். செல்வம் வேண்டுமா? கல்வி வேண்டுமா? அல்லல் தொலையவேண்டுமா? ஆறுதல் உறவேண்டுமா? ஓடிச்சென்று அன்னையின் அடிதொழுங்கள். அவள் திருவடிகளே மனக்கவலை தீர்க்கும் மாமருந்து என்று சாக்த ஆகமங்கள் அறுதியிட்டு உரைக்கின்றன.

துன்பங்கள் நம்மை அணுகா வண்ணம் அரணாகக் காக்கும் சக்தியே "துர்க்கை" - துர்க்கம் என்ற சொல்லுக்கு

**வித்துவான் திருமதிவசந்தா வைத்தியநாதன்**

அரண் - பாதுகாப்பு என்று பொருள் பகைவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மன்னர்கள் "நதி துர்க்கம்" "வனதுர்க்கம்" "கிரிதுர்க்கம்" என்ற மூவகை அமைப்புக்களை அரணாகக் கொண்டனர். அதுபோலவே புலப்பகைகளினின்றும் நம்மைப் பாதுகாக்க தேவி துர்க்கையே தூய அரணாக இருக்கின்ருள். அக்கினி துர்க்கை, மஹாதுர்க்கை, ஜலதுர்க்கை, பிரும்ம துர்க்கை, விஷ்ணு துர்க்கை, ருத்ரதுர்க்கை, வன துர்க்கை, ஸ்தூல துர்க்கை, சூலினி துர்க்கை என்று துர்க்கையின் பேதங்களை ஒன்பதாக ஆகமங்கள் கூறும்.

#### வெற்றித் தெய்வம்

வெற்றிக்குரிய தெய்வம் துர்க்கை. கொற்றத்தைத் தருபவள் இவள் ஆதலால் "கொற்றவை" என்ற பெயரும் உண்டு. துர்க்கையைக் "கொற்றவை" என்றும் காளியைப் 'பழையோள்' என்றும் திருமுருகாற்றுப்படை வழுத்தும். "கொற்றவை நிலை" என்றே ஒரு துறை புறப்பொருள் வெண்பாமாலையில் பேசப்படுகிறது. வெற்றி வேண்டி போர் மேற் கொண்ட வீரன் தான் கருதிய வெற்றியைப் பெற்றதும் தன்னையே நிவேதனப் பொருளாக அவளுக்குப் படைக்கும் அரிய காட்சியை கலிங்கத்துப் பரணி காட்டுகிறது.

"சலியாத தனி ஆண்மைத் தறுகண் வீரர்
'தருக வரம் வரத்தினுக்குத் தக்கதாகப்
பலியாக உறுப்பரிந்து தருதும்' என்று
பரவும் ஒலி கடல் ஒலிபோல் பரவுமாலோ"
"அடிக்கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின் கைக்
—கொடுப்பராலோ
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ"

இமயமலையை இடமாக உடைய பார்வதியைப் போன்றும் விந்திய மலையை இடமாக உடைய வைஷ்ணவியைப் போன்றும், துர்க்கையும் (துர்க்கம்-மலை) மலையை இடமாக உடையவளே.

'அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் வனப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே' என்பார் நன்னூலார். மலையிலக்காக அருளார்ந்த தோற்றம் கொண்டொழுகும் தேவியும் அப்பெருமைக்கு உரியவளே. ஏழில் மலையிலே - கானமர் செல்வியாகிய வனதுர்க்கையை அகநானூறு காட்டுகிறது. மலைச்சாரலிலே 'விறல்கெழு சூலிக்'குப் பலி கொடுத்தலை குறுந்தொகை சுட்டுகின்றது. 'அயிரை மலைக் கொற்றவை' சேரர்களுடைய வழிபாட்டுத் தெய்வம் என்று வரலாறு கூறுகின்றது.

#### மகா பாரதத்தில்

மகாபாரதத்தில் இரண்டு இடங்களிலே துர்க்கையின் பிரார்த்தனை காணப்படுகின்றது. விராட நகரிலே சரந்துறைவதற்காகப் பாண்டவர்கள் பிரவேசித்த பொழுது தங்கள் எண்ணம் நிறைவேறி வெற்றியை அளிப்பதற்காக யுதிட்டிரன் துர்க்கா தேவியைப் பிரார்த்தித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி துர்க்கையம்பாள் நவராத்திரி விழா சிறக்க
எமது நல்லாசிகள்!

திருக்கணித நிலையம்
மட்டுவில் - சாவகச்சேரி

பாடசாலை உபகரணங்கள், ஸ்ரேஷனரிப் பொருட்கள்,
அழகு சாதனப்பொருட்கள் முதலியவற்றிற்கு
சிறந்த இடம்

திருக்கணிதம்
கச்சாய் வீதி, — சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகம்

# 'பங்கஸ்' கட்டுப்பாட்டு ஆய்வு

## தாவரங்களில் காறை அழுகல் நோய் (பகுதி II)

நிரஞ்ஜனி இராமநாதன்
(தாவரவியற்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாண மண்ணில் பரவலாக பரம்பியிருக்கும் இப்பங்கசின் பூஞ்சண இழைகளும் வித்திகளும் அண்மைக் காலங்களில் சந்தைப்படுத்தப்படும் உற்பத்திப் பொருள்களான உருளைக்கிழங்கு, வெங்காயம், இஞ்சிக்கிழங்கு போன்றவற்றின் மேற்பரப்பிலும் கண்டறியப்பட்டன.

பயிர்த் தாவரங்களான சொலனேசிய (Solanac-cae), அவரைக்குடும்பத் Legumes) தாவரங்களை மட்டுமன்றி இப்பங்கசு வானது தொலக்கேசியா (Colacasia spp) போன்ற அலங்காரத் தாவரங்களையும் (Ornamental plants) பாதிப்பது தெரியவந்துள்ளது.

தண்டுப் பகுதிகளில் மட்டுமன்றி, மண்ணிலிருந்து மழைத்துளிகளுடன் தெறிக்கப்படும் போது இப்பங்கசானது நேரடியாக இலைத் தொகுதியிலும் நோய்ப் பரப்புகளைத் தோற்றுவிக்கக் கூடியது என்பது தற்போது அறியப்பட்டுள்ளது.

இப்பங்கசின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி வீதமும், இறந்த தாவர சேதனப் பொருள்களிலுள்ள மிகவும் சிக்கலான காபோவைதரேற்றுகளான (Carbohydrates), லிக்னின் (Lignin), செலுலோசு (Cellulose), அரை செலுலோசு (Hemicllue-lose) போன்றவற்றை இலகுவில் பயன்படுத்தக் கூடிய போசணைமுறையும் மற்றும் இதன் வளர்ச்சி, பரம்பலை உயிரினவியற்குரிய முறையில் மட்டுப்படுத்தக்கூடிய ஏனைய நுண்ணங்கிகள் மண்ணில் இல்லாது காணப்படுவதுமே இப்பங்கசைக் கட்டுப்படுத்துவதிலுள்ள பெரும் முட்டுக்கட்டைகளாகும். எனினும் இது வரை வடபகுதி மண்ணிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட ஸ்கெலெரொட்டியும் ரொல்ப்சை பங்கசு இனங்களில் (Sclerotium rolfsii, Fun-gal strains) அதிவீரியமுள்ளதான பம்பாய் வெங்காயத்தைப் பாதிக்கும் பங்கசு இனமானது கட்டுப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இப்பங்கசின் தாக்கத்தை மட்டுப்படுத்துவதற்கு மண்ணின் ஈரலிப்பைக் கட்டுப்படுத்துவதும் மண்ணின் மேற்பரப்பில் உக்கல் போன்ற சேதனப் பொருள்கள் காணப்படுதலைத் தவிர்ப்பதும் அத்தியாவசியமானதாகும். நீர் இலகுவில் வழிந்தோடக்கூடிய தன்மை கொண்ட மண் வகைகளில் இப்பங்கசின் பெருக்கம் பெருமளவு தடுக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பங்கசை இரசாயன முறையில் கட்டுப்படுத்துவதற்கு பி.சி.என்.பி (P. C. N. B) எனப்படும் இரசாயனப் பதார்த்தத்தைக் கொண்ட மொறாட் (Morut) ரெருகலோர் (Terraclor) பிறசிக்கோல் (Brassicol) போன்ற பங்கசு நாசினி கலவைகளைப் பாதிக்கப்பட்ட தாவரங்களைக் கொண்ட மண் மேற்பரப்பில் விசிறுதல் அவசியமானதாகும்.

மேலும் இப்பங்கசின் வாழ்க்கை முறை, வட மாகாணத்தில் இது தாக்கும் பயிர்களைப் பற்றிய விவரங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் இப்பங்கசு அதிகமாகப் பரம்பியிருக்கும் மண்வகைகள், மண்ணில் இப்பங்கசின் பெருக்கத்தை ஊக்குவிக்கும் காரணிகள், இது காணப்படுவதனால் மண்ணின் வளத்திலேற்படுத்தப்படும் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகளும், இப்பங்கசை முற்றாகக் கட்டுப்படுத்தக் கூடிய வழிமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகளும் தற்போது யாழ். பல்கலைக்கழக தாவரவியற்பீடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ✱

## கமழும் புலமை

## காலத்தால் அழியாத...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பார்தியர்களிடம் ரோமர்கள் தோல்வியுற்றார்கள் என்று கூறியிருக்கிறேன்.

ஒருவேளை பார்த்தியர்களுக்கு மங்கோலியர்கள் உதவி செய்திருந்தாலும் இருக்கலாம்.

ரோம சரித்திரம், முக்கியமாக ரோமக் குடியரசின் சரித்திரம் என்றால் ஐரோப்பியர்களுக்கு அன்பு அதிகம். பழைய ரோம ராஜ்யத்தின் கால்வழியில் வந்தவை தற்காலத்திய ஐரோப்பிய ராஜ்யங்கள் என்பது அவர்கள் எண்ணம். இது ஓரளவுக்கு உண்மையே.

ஆகவே இங்கிலாந்தில் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தற்கால சரித்திரம் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் அவர்கள் கட்டாயம் கிரேக்கரோம சரித்திரங்கள் படித்தாக வேண்டும்.

ஜூலியஸ் சீஸர் தான் கால் தேசத்தில் நடத்திய போரைப் பற்றி லத்தீன் மொழியில் எழுதி வைத்திருக்கும் நூலைப்படிக்கும் படி நான் வற்புறுத்தப்பட்டது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

சீஸர் போர் வீரன் மட்டுமல்ல, சிறந்த எழுத்தாளனும் கூட. அவன் எழுதிய 'கால் பிரான்சு பேரைப் பற்றிய நூல்' ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பள்ளிகளில் இன்றும் கற்கப்பட்டு வருகிறது.

அசோகர் காலத்தில் உலகம் எவ்வாறு இருந்தது என்று பார்க்க ஆரம்பித்தோம். நான் அவ்வாறு பார்த்ததோடு, அவன் காலத்துக்குப் பின்னேயும் ஐரோப்பாவிலும் நிகழ்ந்த சில வரலாறுகளையும் கவனித்தோம்.

இப்போது நாம் ஏறக்குறைய கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்திற்கு வந்து விட்டோம். ஆகவே நாம் சிறிது பின் சென்று இந்தியாவையும் அங்கு நிகழ்ந்தவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் அசோகன் மரணத்திற்குப் பின்பு அங்கு பெரிய மாறுதல்கள் நிகழ்ந்தன. வடக்கிலும் தெற்கிலும் புதிய சாம்ராஜ்யங்கள் தோன்றின.

உலக சரித்திரமானது தொடர்ந்து வருகிற ஒரு முழு நிகழ்ச்சியாகும். இதை நீ உணர வேண்டும் என்று நான் முயன்று வந்திருக்கிறேன். ஆனால், ஆதிநாட்களில் தூர தேசங்களுக்குள் ஏற்பட்டிருந்த தொடர்பு அவ்வளவு நெருக்கமானதல்ல என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும்.

பல வழிகளில் முன்னேற்றம் பெற்றிருந்த ரோமாபுரியில் பூகோள சாஸ்திர ஞானம் மிகவும் குறைவாகவே இருந்தது. அக்காலத்தில் தேசப் படங்கள் கிடையா. இவ் விஷயங்களைக் கற்பதற்கும் முயற்சி செய்யப்படவில்லை.

ரோமாபுரியில் செனட் சபையில் அங்கம் வகித்த அறிவாளிகளும் இன்னும் பெரிய சேனாதிபதிகளும் தாங்கள் உலகம் முழுவதையும் கட்டி ஆள்வதாகவே எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இன்று பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறு பையனுக்கோ, பெண்ணுக்கோ உள்ள பூகோள சாஸ்திர அறிவு அவர்களுக்கு இல்லை.

ரோமாபுரியை ஆண்டவர்கள் தாங்களே உலகுக்கு அதிபர்கள் என்று எண்ணியிருந்தது போலவே சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஆசியாக் கண்டத்தில் சீனாவை ஆண்டு வந்தவர்களும் தாங்கள்தான் உலகுக்கு அதிபர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். ✱

## பண்டிதமணி

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யில் 1925 ஆம் ஆண்டில் ஆரம்பித்த இடைக்காட்டுப் புவனேஸ்வரி வித்தியாலத்து முதல் தலைமையாசிரியராய் மர்ந்தவர் சுப்பிரமணியர் இராமசாமி என்பார். இவர் பயிற்றப் பெற்ற தமிழாசிரியராயிருந்ததோடு பண்டிதப் பட்டமும் பெற்றிருந்தார். இவரின் சேவையினை சேர். இராமநாதன் இடைக்காட்டு வரவேற்பில் அருமையாகப் பாராட்டியிருந்தார்.

இவர் இடைக்காட்டில் மங்கலங்கள் பொலிய சைவப் பண்பாட்டு விழாக்கள், பண்டிகைகள், குருபூசைகள் முதலியவற்றை மாணாக்கர் மத்தியில் மகிழ்ச்சியோடு செய்து, அவர்களின் அபிமானத்தையும் ஆதரவையும் அன்பு முறையில் பெற்றிருந்தவர். இத்தகைய பெரியாரின் சேவை சைவாசிரிய கலாசாலைக்குத் தேவை யெனக் கருதிய இராசரத்தினம் அவர்கள், இவரை 1-1-1929 முதலாகப் பேராசிரியர் வரிசையில் சேர்த்தார்.

(வளரும்)

## தேவி வழி....

(3ஆம் பக்க தொடர்ச்சி)

களே எட்டாதவைகள் உமையின் ஒரு அம்சம் துர்க்கை நிலை

துர்க்கையை முதன் மூன்று இராத்திரியிலும், இலக்குமியை அடுத்த மூன்று இராத்திரியிலும், சரஸ்வதியை எஞ்சிய மூன்று இராத்திரியிலும் முறையே வீரம், செல்வம், கல்வி குறித்து வழிபட்டுவருவது ஆன்றோர் ஆசாரம்.

நவராத்திரி நவந்தரு பேதமாகி அருள் புரியும் தேவி வழிபாட்டுக்குச் சிறந்த புண்ணிய காலமாம்.

துர்க்கையை இலக்குமியை சரஸ்வதியை வழிபடுவது தேவியை வழிபடுவதேயாம்.

விஜயதசமி பத்தாம் நாள்; ஒன்பது நாளும் தேவியை உபாசித்துத் தத்தம் தொழில்களை ஆரம்பித்தற்கு உரிய நாள்

குழந்தைகளுக்கு அக்ஷராரம்பம் விஜயதசமியில் செய்து வைப்பது விசேடம்.

அறிவறிந்த மக்கள் நவராத்திரியைச் சிவராத்திரியில் முற்றச் செய்து, 'அன்னையின் அருளால் அப்பனை அறிவர் ✱

## இருண்ட காலத்தை நோக்கி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற பழைய நிலைக்குத் திரும்பி விட்டது

இதனால் தான் மொழியின் மீது ஆற்றலும் பிற மொழி இலக்கியங்களை நன்கு தெரிந்தவர்களும் காவிய ரசனை கொண்டவர்களுமான வ. வே. சு. ஐயர், பாரதி போன்றவர்கள் நாவல் எழுத விரும்பவில்லை என்று தோன்றுகின்றது.

இவர்களைப்பின்பற்றிய இவர்களைப் போன்ற சமூக லட்சியங்களைக் கொண்டிருந்த புதுமைப் பித்தன், கு. பா. ரா. போன்றவர்களும் நாவல் எழுதுவதற்கு விருப்பவில்லை. புதுமை நோக்கும், ஆற்றலும் கொண்டவர்களின் ஆர்வம் சிறுகதைகளின்பால் திரும்ப தமிழில் சிறுகதைகளின் பொற்காலம் உதயமான அதே சமயத்தில் நாவல் அநேகமாக தன்னுடைய இருண்ட காலத்தை நோக்கித் திரும்பிவிட்டது.

பாமர ரஞ்சகமாக எழுதுவது வீழ்ச்சி என்று பலராலும் சொல்லப்படுகின்றது. அது உண்மையானால் தமிழ் நாவல் என்று புதிய உருவம் ஏற்பட்ட முப்பது நாற்பது ஆண்டுக்குள்ளேயே அந்த நிலைமை தமிழ் நாவல்களுக்கு ஏற்பட்டு விட்டது ஒரு நதி மாதிரி ஓடிக்கொண்டிருக்கிற இலக்கியத்தில் வளர்ச்சி தேக்கம் என்று சொல்வது அவரவர் மனோபாவத்தைச் சேர்ந்தது

உணர்ச்சி வசப்படாமல் சரித்திரக் கண்ணோட்டத்தோடு ஒன்றை நாம் அணுகினால், அது அவ்வப்போது மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப திசை திரும்பி மாறுதல்களை அடைகின்றது என்பது தான் உண்மை எனப் புரியும்

தமிழ் நாவலும் அப்படித்தான் படிப்பாளிகளினால் லட்சிய நோக்கோடு துவங்கிய ஒரு முயற்சி முப்பது ஆண்டு வாசகர்களின் விருப்பத்துக்கு ஏற்ப வளர்ந்து திசை திரும்பி விட்டது என்றே சொல்லலாம்.

இக்காலத்திற்தான் மர்மக்கதை மன்னர்களான ஜே. என். ரங்கராஜு, ஆரணி குப்புசாமி முதலியார் வெற்றி பெறத் தொடங்கினர். ஆங்கில பணியைத் தழுவிய மர்மக்கதைகள் என்றபோதிலும் அவை தமிழ் காவிய மரபுப்படியே எழுதப்பட்டன. மதனும்பாள் அல்லது மகா மாயக்கதை என்ற ஆரணி குப்புசாமி முதலியாரின் மர்ம நாவல், சிவன், விஷ்ணு, பிரம்மா மூவர் மேலும் புகழ்ந்து பாடப்பட்ட காப்புச் செய்யுளுடன் துவங்கி, ஓம் தத் சத் என்று முடிகிறது

இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட பாற்கொள்ளை பற்றிய நாவல்! ஆனந்தமே சொரூபமாக உள்ள ஆண்டவனால் படைக்கப்பட்ட இவ்வகலோகத்தில் என ஆரம்பிக்கும் நாவல் துர்வழியில் நடப்போர் ஆண்டவனின் தண்டனை பெறுவர் என்று முடிகிறது.

இக்கால கட்டத்தில் எழுதிய இதர எழுத்தாளர்களில் வை. மு. கோதைநாயகி அம்மாளைக் கோடிட்டு சொல்வது அவசியமாகின்றது. பெண்ணின் மன ஆழத்தையும், வாழ்வின் துன்பப்பகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த இவரது பல நாவல்கள்... நடுவில் திரைப்படமாக மாறியதும் உண்டு.

நாவல் முன்னோடிகளுக்கு இருந்த லட்சிய நோக்கு பின்னால் வந்த மர்ம நாவல்களின் சுவாரஸ்யம் இரண்டையும் ஒன்று சேர்த்துத் தரம் குறையாமல் அதே சமயம் மிக மிக விரும்பத்தக்கதாக எழுதியவர் கல்கி

- (வளரும்)

## துன்பம் அணுகாது நம்மை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தான் பீஷ்மபர்வத்திலே கண்ணனின் தூண்டுதலால் அர்ச்சுனன் துர்க்கையைப் பிரார்த்தித்தான். மூர்த்தி பேதங்களில் சிறப்பு வாய்ந்தவை துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியின் திருவுருவங்கள். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சக்தியின் அவதாரங்கள் அவை. சண்டமுண்டர்களை வதைக்கச் 'சாமுண்டி'யாகவும், சும்பன் நிசும்பனை வதைக்க 'கௌசிகி' யாகவும் பண்டாசுரனை வதைக்க 'லலிதாமஹாத்ரிபுர சுந்தரி'யாகவும், மஹிஷாசுரனை வதைக்க 'துர்க்கா பரமேஸ்வரி'யாகவும் அன்னை அருள் உருக்கொண்டாள். கி. பி. 7ம் நூற்றாண்டு மகேந்திரவர்மனது சிங்கவரக் குடைவரைக் கோயில்களில் சுவற்றில் புடைப்புச் சிற்பமாகக் காணப்படும் 'மஹிஷா சுர மர்த்தனி' யின் விழுர்ந்த திருக்கோலம் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகும்.

### சாவகச்சேரியில்

இத்தகு பேரழகுப் பெட்டகமாய், வீரத்துடன் ஈரத்தையும் கொண்டு ஓடிவரும் காரணர்க்கு உண்மைப் பொருளாய், அலையும் நெஞ்சினர்க்கு அலைகடற்றோணியாய் தாழங்காட்டையே, தன் தவத்தின் நிலைக்களனாக்கி சங்கமும், சக்கரமும் தாமரைக் கையேந்தி வரத அபயமும் கொண்டு அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் சாவகச்சேரி துர்க்கையம்மனின் திருவுருவைக் காணுதார் கண்ணிலாதாரே. துணையும், தொழும் தெய்வமும் பெற்ற தாயும், சுருதிகளின் பணியுமாகக் காணும் கன்னியின் கருணைச் சுருதி இங்கு அலைமோதும் மக்கள் ஒவ்வொருவரும் தாயின் தண்ணளிக்குப் பாத்திரராகின்றனர். திருமணம் கருதியும், பிள்ளைவரம் கோரியும், தீராத நோய் தீர்க்கு மாறும், மனக்குழப்பங்கள் அகல வேண்டியும் அன்னை துர்க்காம்பிகையின் திருவடிகளை திரிகரணசுத்தியாக வழிபடுபவர்களுக்கு அன்னை சத்திய ஜோதியாய் ஒளிவீசி அவ்வவர் வேண்டும் வரங்களை உடனே ஈந்துவிடுகின்ற க்ஷிப்ர ப்ரசா[illegible] சேரியில் ஞானாம்பிகை [illegible] பௌர்ணமி தோறும் இங்கு நடக்கும் திருவிளக்குப் பூஜை மிகச் சிறப்பானது. திருவிழாக் காலங்களில் மட்டுமல்ல சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக் குருக்கள் அவர்களின் தாய்மையான பூஜா உபசாரத்திலே தேனுண்ட வண்டெனக் கிறங்கி விடுவதைப், பார்த்து அனுபவித்தவர்கள் மட்டுமே அறிவார். நவராத்திரி விழாக் காலங்களிலோ அன்னையின் திருவருள் இங்கு கரைபுரண்டு ஓடும். அதிலே அடியவர்கள் முக்குளிப்பார்கள். விதம் விதமான அலங்காரங்களும், கண்ண விளக்குகள் ஒளி கூட்ட, வேதியர்கள் வேதம் இசைக்க, அரியாசனத்தில் அன்னையை அழகு கொலுவிருத்தி அடியார்கள் இறும்பூதெய்தும் காட்சி காணக் காணத் தெவிட்டாத ஒன்று.

இத்தகைய அருளனுபவம் பெற, துர்க்கையம்பாவின் தண்ணளியில் நீராட, கிட்டாத பக்திச்சாறு அருந்த சேர வாரும் ஜெகத்திரே! சேர வாரும் ஜெகத்திரே!! ✱


(சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் 1973 ஆம் ஆ[illegible] கலைமகள் சிறப்பு மலரிலிருந்து எடுக்கப்பட்டது)

### வீடியோ

வீடியோ சம்பந்தமான கட்டுரையின் [illegible] அடுத்த வாரம் வெளிவரும்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 36



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ..............................

..............................

வயது: ..............................

விலாசம் ..............................

..............................

ஒப்பம் ..............................

**இடமிருந்து வலம்**

1- குளுரை
4- மனிதனை நெறிப் படுத்த உருவானது
6- ஒரு ராசி
7- பூமி
8- வாழ்க்கையின் ஆரம்பம்
10- உண்
12- மரம்
13- நட்சத்திரங்களில் ஒன்று
16- இதில் சுப கருமங்கள் செய்யலாகாது என்பது நம்பிக்கை
18- சப்பலின் தரிப்பிடம்
20- வயோதிபம்
22- பயில்
24- பாய்
25- நகைகளில் ஒன்று
26- ஒரு யுகத்தின் பெயர்

**மேலிருந்து கீழ்**

1- சேற்று நிலம்
2- முக்கனிகளில் ஒன்று
3- இளையவன்
4- வம்சம்
5- குளிர்மை
7- தவறு
9- உலோபி
11- குழந்தை
12- யோகிகளுக்கு உரியது
14- ஒரு மரம்
15- கப்பம்
16- பிரதி
17- பாக்கு தரும் மரம்
19- உச்சி
21- வணங்கு
23- திறல்

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விடைகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

1. "சொற்சிலம்பம்" குறுக்கெழுத்துப் போட்டியில் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.

3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்

4. கூப்பனை நிரப்பும்போது திரு. அல்லது திருமதி அல்லது செல்வன் அல்லது செல்வி என்பது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.

5. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

6. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்

7. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல 36 சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

8. உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

✱ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரில் இருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் இல. 34 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- செல்வி நாகமுத்து ஜெயராணி, மாம்பிராய் காங்கேசன்துறை

இரண்டாம் பரிசு:- செல்வன். ஐ பரமேஸ்வரன், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

மூன்றும் பரிசு:- திரு. சி. தர்மலிங்கம், வாளித் தொழிற்சாலை, மாவிட்டபுரம்.

✱ குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர் பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

### சொற்சிலம்பம் இல. 34 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1- நான்முகன் 2- கடல்
4- சிக 5- தவழும்
7- கட 8- மலைநாடு
10- கைம் 12- தகப்பன்
13- புரவி 15- வகிர்
16- பாம்பு 17- போது
18- தாச

**இடமிருந்து வலம்**

1- நாகரிகம் 3. நாசி
6- முகமன் 9- வகை
11- கடலை 12- தழும்பு
14- நாடகம் 15- வடு
16- பாவி 17- போகி
18- தாபனம் 19- துர்
வாசன் 20- புலி

## விடுதலைப் போராட்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற உண்மையான பயமும் சந்தேகமும் ஏற்படுகிறது.

### இடைக்காலத் தீர்வு வந்தால்...

கேள்வி: உடன்பாடு ஒன்று ஏற்பட்டால் இலங்கையில் முழுமையான புரட்சி ஒன்று பற்றிய உங்கள் நிலை என்ன?

பதில்: கேள்வியில் பல மாறுபடும் தன்மைகள் உள்ளன அனுமானத்தில் எழுந்தது இக்கேள்வி. ஆயினும் அப்படியான சாத்தியக்கூறுகள் அரசியல் ரீதியில் எழக்கூடும். மக்கள் விடுதலை பெறும்வரை புரட்சி தொடரும் என்று ஆரம்பத்தில் இருந்தே நாம் சொல்லி வந்துள்ளோம். ஆகவே உடன்பாடு என்பது, தற்போதைய அபிலாஷைகளுக்கான இடைத்தீர்வு என்று நாம் கருதுவோம். உடன்பாடு வருமா, வராதா என்பது குறித்து நாம் கருத்துச் சொல்ல விரும்பவில்லை அப்படி ஓர் உடன்பாடு காணப்பட்டாலும் அந்த இடைக்கால உடன்பாட்டின் மூலம் ஏற்படும் நிர்வாகத்தில் ஈரோஸ் இடம்பெறமாட்டாது — இதனை நான் தெளிவாகச் சொல்வேன்.

புதிய அமைப்பில் எமது அரசியல் நடவடிக்கைக்கு இடம் உண்டு என்று நாம் நம்புகிறோம். இலங்கை மக்களின் விடுதலைக்காக எம்போராட்டம் தொடரும்.

(மிகுதி உதயனில் தொடரும்)

## குரெஸ் நாதஸ்வரம்

இது கற்பனையல்ல அப்படியிருந்தால் பேராசிரியர் சாம்பமூர்த்தி அப்படி எழுதியிருக்க மாட்டார்கள்.

குரெஸ் மண்டோலின் நிகழ்ச்சியை நான் என் கண்களாலேயே கொழும்பில் பார்த்தேன்,

சந்தேகம் எழுப்பிய வாசகர் இனி எங்கே எழுதப்பட்டது என்று கேட்பார்.

முத்துசாமி தீக்ஷிதர் ஆங்கிலேய மெட்டுகளுக்கு சாஹித்தியங்கள் அமைத்தார் என்றால் இவர் நம்பமாட்டார். முத்துசாமி தீக்ஷிதரின் ஒருகஹ முத்திரையுடன் 20 உருப்படிகளுண்டு

இவற்றில் இருந்து தான் "நோட்" பிறந்தது.

—எஸ். கனகசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதாலும் செயலாலும் தாராள மனப்பாங்கை வலியுறுத்தும் 'லயன்' சேவை

"நாம் சேவையாற்றுவோம்" என்ற விருது வாக்கியத்திற்கு செயல்வடிவம் கொடுத்து இயங்குகின்ற உலகின் மிகப் பெரிய மக்கள் சேவை ஸ்தாபனமே 'லயன்ஸ்' சர்வதேச ஸ்தாபனம்.

நமது நாட்டிலும் லயன்ஸ் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டமை எமது மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

13 கோடி அங்கத்தவர்களைக் கொண்ட சர்வதேச லயன்ஸ் கழகம், 37,324 கழகங்களூடாக 665 ஆளுநர் மாவட்டங்களை உள்ளடக்கிய 159 நாடுகளிலும் புவியியல் பிரிவுகளிலும் மக்கள் சேவையாற்றி வருகின்றது.

**ஸ்தாபகர்**

மெல்வின் ஜோன்ஸ் என்ற ஒரு காப்புறுதி முகவரின் கனவே 'லயன்ஸ் கழகம்' என்ற நனவாகி பலசேவை ஸ்தாபனங்களை ஒன்று சேர்த்து 7 6 1912 இல் சிக்காகோ நகரிலே லயன்ஸ் கழகம் உதயமாயிற்று. மெல்வின் ஜோன்ஸ் ஸ்தாபகராய் இருந்த பொழுதிலும், கழகத்தின் முதல் செயலதிபராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1948 ஆம் ஆண்டளவில் லயனிசம் ஐரோப்பிய நாடுகளாகிய சுவீடன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் என்பனவற்றிலும் வேரூன்றியது. 1952 இல் முதலாவது லயன்ஸ் கழகம் ஜப்பானில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் உண்மையான ஒரு உலகளாவிய ஸ்தாபனமாக லயன்ஸ் கழகம் பரிணமிக்கத் தொடங்கியது.

> லயன்ஸ் அங்கத்தவர் அதிகரிப்பு மாதம் அக்டோபர்.

**இலச்சினை**

லயன்ஸ் கழக அங்கத்தவர்களின் அணியும் இலச்சினை மூலம் அடையாளம் காணப்படுகின்றது. வர்ண நிறத்திலான 'L' என்ற எழுத்து வட்டவடிவ ஊதா நிறத்தின் மத்தியில் அமைந்துள்ள 'L' இன் இரு மருங்கிலும் சிங்கத்தின் இருதலைகள் ஒன்றுக்கொன்று எதிர்ப்புறமாக பார்த்தபடி உள்ளது. இவ்விரு சிங்கத்தலைகளும் முறையே சென்ற காலத்தையும், எதிர்காலத்தையும் குறிக்கின்றது. நீல் வட்டத்தின் மேல் 'லயன்ஸ்' என்றும் கீழ் 'சர்வதேசம்' என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதுவே 'லயன்சின்' இலச்சினையாகும். இந்த இலச்சினையை ஒவ்வொரு 'லயனினதும்' தாரக மந்திரமான 'நாம் சேவையாற்றுவோம்' என்பதை ஞாபகமூட்டுகின்றது.

லயனிசத்தின் கோஷம் 'சுதந்திரம்', 'விவேகம்', 'தேசத்தின் பாதுகாப்பு' என்பனவாகும். சர்வதேச லயன்ஸ் உத்தியோகபூர்வமான ஏற்றுள்ள நிறங்கள் ஊதா நிறமும், மஞ்சள் நிறமுமாகும். ஊதா நிறம், தனக்கும் தனது நண்பர்களுக்கும் விசுவாசமாய் இருத்தல், அகத்திலும் புறத்திலும் நேர்மையாய் விளங்குதல் ஆகியவற்றைக் குறிக்கின்றது. தங்கநிறம் தொழிற்பாட்டின் இயக்கசக்தி, புனிதவாழ்வு, மனதாலும் கொடையாலும் தாராள மனப்பாங்கு ஆகியவற்றைக் குறிக்கின்றது.

இந்நாட்டில் தற்பொழுது 306 எ, 306 பி என இரு ஆளுநர் மாவட்டங்கள் இருக்கின்றன. அதில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த கழகங்கள் 306 பி யைச் சேர்ந்தவையாகும்.

மேலும் கூடிய லயன்ஸ் கழகங்கள் உருவாக்கப்பட்டதாயின் 306 சி என்ற மேலுமொரு ஆளுநர் மாவட்டம் ஏற்படவாய்ப்புண்டு. லயன்ஸ் கழகங்களின் பெருக்கம் மக்களுக்கான சேவையின் அதிகரிப்பாகிய பிரதிபலிக்குமென்பதில் ஐயமில்லை. எனவே ஒவ்வொரு லயன்ஸ் கழக அங்கத்தவரும் மேலும் ஒரு சேவை மனப்பாங்குடைய பாரை அங்கத்தவராகச் சேர்த்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதுவே ஒவ்வொரு லயன்ஸ் கழகமும் மேலும் ஒரு கழகத்தை உருவாக்க உதவுகிறது.

**சகலருக்கும் ஏற்றது**

ஒரு சிலரிடையே தவறுப் பாரியுள்ள கருத்தை தெளிவுபடுத்தி உண்மை நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. சிலர் லயன்ஸ் கழகமென்பது சமூகத்தில் மேல்மட்டத்தில் (Elite) உள்ளவர்களது, அல்லது வசதிபடைத்தவர்களின் பொழுதுபோக்குக் கழகமென தவறான கருத்தைக் கொண்டுள்ளார்கள். கொழும்பு போன்ற பெரிய நகரங்களில் உள்ள கழக அங்கத்தவர்கள் மேல்மட்டத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மக்களின் சேவையை நாடுபவர்களுக்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கே தமது சேவையை முற்று முழுதாக வழங்கி வருகின்றனரென்பது கருத்திற் கொள்ள வேண்டியதொன்றாகும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள கழகங்களை எடுத்துக் கொண்டால் அவை சமூகத்தின் மேல்மட்டத்தவர்களைக் கொண்டதெனக் கூறமுடியாது. எனவே லயன்ஸ் கழகம் சாதாரண மக்களைக் கொண்ட 'மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை' எனக் கருத்திற்கொண்டு புனித பணியாற்றும் சேவை ஸ்தாபனமெனக் கூறின் அது மிகையாகாது. அவையால் மேலும் லயன்ஸ் கழகங்களை உருவாக்கி மேலும் மக்கள் சேவையைப் பெருக்க ஆளுமை ஒருவரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் வேண்டும்.

லயன் த. சண்முகநாதன்
கோப்பாய் லயன்ஸ் கழகம்

# புற்றுநோயை அற்றுவிட செய்ய ஆரம்பக்குறிகளை அறிந்திருங்கள்

> புற்றுநோய் பெருக் உயிர்கொல்லியாக மாறிவருகிறது. அது பற்றிய அறிவை மக்களிடையே பரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
>
> இந்தவகையில் அடமாகாண புற்றுநோய்ச் சங்கம் எதிர்காலப் பிரசைகளான மாணவர் மத்தியில் ஒரு பரீட்சையை இம்மாதம் 12 ஆம் திகதி நடத்துகிறது.
>
> அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு உதவும் நன்நோக்குடன் இக்கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம்.

மனிதனைப் பற்றிக் கொல்லும் பல்வேறு நோய்களுள் மிகவும் பயங்கரமானது புற்றுநோய் என்பதனை அனைவரும் அறிவர். விஞ்ஞானிகளின் இடையறா முயற்சியால் புற்றுநோய்க்கான காரணங்களும் அதற்கான சிகிச்சை முறைகளும் ஓரளவுக்குக் கண்டறியப்பட்டபோதிலும் முற்றாக அந்நோயைக் குணப்படுத்தக் கூடியளவுக்கு பரிசோதனைகள் இன்னமும் பூர்த்தியாகப் படவில்லையென்றே கூற வேண்டும்.

பெண்ணின் சூலும் ஆணின் விந்தும் சேரும் போது உண்டாகும் 'கரு' இரண்டு-நான்கு என்றே பெருகிக்கொண்டே செல்லும். இவைகளையே 'கலங்கள்' (Cells) என அழைக்கின்றோம். இவைகளிலே குறிப்பிட்ட தொழில்களைச் செய்வதற்கெனச் சில கலங்கள் சிறப்பாக வளர்ந்து இருதயம், சிறுநீரகம், மூளை போன்ற உறுப்புக்களாகி குழந்தை பிறக்கின்றது. குழந்தை பிறந்த பின்னரும் இப்பெருக்கம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும். பெரியவர்களானதும் இக்கலப்பெருக்கம் ஒரு வரையறைக்குள் தொடங்கும். அழிவுபடும் கலங்களை புதுப்பிப்பதற்காக அவ்வப்போது கலப்பெருக்கம் ஏற்பட்டு, உறுப்புக்கள் அதே நிலையில் பேணப்படும்.

உயோதிபக் காலத்தில் இக்கலங்கள் பெருகுந் தன்மை குறைவதால் சிறிது காலக்கிரமத்தில் அழிந்து விடுகின்றன. இதனாலேயே உறுப்புக்கள் பலங் குன்றிச் சக்தியற்றனவாகின்றன.

**கலத்திரட்சி**

புற்றுநோய் ஆரம்பிக்கும்போது இக்கலங்கள் திடீரெனச் சுறுசுறுப்படைந்து விரைந்து பெருக்கமடைகின்றன. இதனால் உண்டாகும் 'கலத்திரட்சி' உறுப்பின் தொழிலைச் செய்யாது, உடலில் இருந்து சத்துக்களைப் பெற்று சேவையற்ற ஓர் திரட்சியாய் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

இத்தகைய அசாதாரணமான வளர்ச்சி உடம்பின் எந்த உறுப்புக்களிலும் எப்பகுதியிலும் தோன்றலாம். இதனால் அந்த உறுப்பு மட்டும் பாதிப்படைவதில்லை. உறுப்புடன் தொடர்புபட்ட உடம்பின் பல பாகங்களிலிருந்தும்— வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் உறிஞ்சப்படும் இதனால் தேகம் மெலிவடைந்து பலவீனம் அதிகரிக்கும்.

புற்றுநோயை ஓர் ஒட்டுண்ணியாகக் கூறலாம். ஒட்டுண்ணிபோல நோயாளிக்குப் பல்வேறு நிலைகளில் தாக்கத்தை உண்டாக்குகின்றது.

புற்றுநோயானது வளரும் உறுப்பிலிருந்து அயலில் உள்ள உறுப்புக்களுக்கும் பரவுவதுமல்லாமல் இரத்தக்குழாய்களினூடே சென்று வேறு உறுப்புக்களிலும் எதிர்பாராத வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய [illegible] மிகவும் ஆபத்தானது.

இதனால் ஈரல், சுவாசப்பை, மூளை, எலும்பு ஆகிய உறுப்புக்கள் பாதிப்படைந்து ஈற்றில் தாங்கொணா வேதனையையும் மரணத்தையும் உண்டாக்கும் கொடிய நோயாக அமைந்து வருகிறது.

**பலகாரணிகள்**

புற்றுநோய் உடம்புக்கு உண்டாகும் ஆபத்துக்களின் உக்கிரம் பலகாரணிகளில் தங்கியுள்ளது.

ஒரே வகையான புற்றுநோய் வெவ்வேறு நோயாளிகளின் உடல் நிலையைப் பொறுத்து வேறுபட்ட தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

இப் புற்றுநோயால் உருவாக்கப்பட்ட கலங்களின் வகை; கலங்களின் படிவத்திலும் பருமனிலும் ஏற்படும் மாற்றத்தின் அளவு; புற்றுநோய்க்கட்டி வளர்ச்சியடையும் விதம்; நோய் உருவாகிய உறுப்பு; ஏனைய உறுப்புக்களுக்குப் பரவிய அளவு ஆகியவற்றையும் அடக்கியுள்ளது.

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பதால் இதனைக் குணப்படுத்துவது சுலபம் என்று வைத்தியர்கள் கூறுவர்.

எனவே புற்றுநோய் ஆரம்பத்தின் போது உண்டாகும் அறிகுறிகளைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளுவது, அவசியமாகும். அவ்வாறு தென்படும்போது உடனடியாகத் தகுந்த வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறப்பட வேண்டும்.

**ஆரம்ப அறிகுறிகள்**

தொடர்ந்த பசியின்மையும் உடம்பு மெலிவடைதலும் ஏற்படுமாயின் இரைப்பைப் புற்றுநோய் இரத்தப் புற்றுநோய் ஆகியவற்றிற்கான அறிகுறிகளாகும்.

உணவு உட்கொள்ளும் திசு நாற்பது வயதிற்கு மேற்பட்ட கடினம் ஏற்படுமாயின், களம் குழாயில் புற்றுநோய் அமைவதை உறுதிப்படுத்தும்.

உண்ட உணவு ஜீரணமாகாமல் இருத்தல், உணவு களிக் குறைவடைதல், சாப்பிட்ட பின்பு அசௌகரியப்படுதல் என்பன இரைப்பையில் உண்டாகும் புற்றுநோய்க்கான அறிகுறியாகும்.

மலங்கழிக்கும் போது உண்டாகும் மாற்றங்கள்: மலத்துடன் இரத்தம், சீதம் கசிதல், மலச்சிக்கல்- வயிற்றோட்டம் என்பன மாறிமாறி ஏற்படின், பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயைக் குறிக்கும்.

இரத்தம் பலவாசலாகப் போவது பெருங்குடலில் ஏற்படும் புற்றுநோயையும் சிறுநீருடன் இரத்தம் செல்வதுகலப்பையில் ஏற்படும் புற்றுநோயையும். பெண்களுக்கு ஒழுங்கின்றி வரும் மாதவிடாய் அல்லது அடிக்கடி வரும் மாதவிடாய் கருப்பை புற்றுநோயையும் குறிப்பனவாகும்.

உடலில் எப்பாகத்திலும் கட்டி அல்லது கழலை ஏற்பட்டு அதவிரைவில் வளர்ச்சியடையுமானால் புற்றுநோயாகவும் இருக்கக் கூடும்.

தொடர்ச்சியாகக் காணப்படும் இருமல் அல்லது குரலடைப்பு மூன்று வாரங்களுக்கு மேல் நீடிக்குமானால் நுரையீரல்— குரல்வளைப் பகுதியில் ஏற்படும் புற்றுநோய்க்கு அறிகுறியாகும்.

உடலில் உண்டாகும் கட்டி அல்லது உடம்பில் உள்ள மச்சத்தில் மாற்றம் ஏற்படுமானால்— கருமை புதியகட்டி, மச்சம் என்பன உண்டாகுமானால் புற்றுநோய்க்கு அறிகுறியாகலாம்.

சைவமணி வித்வான் மு. [illegible] ரத்தினம்

# வடக்கும், கிழக்கும் தமிழர் . . . . . .

(3ஆம் பக்கத் தொடர்ச்சி) பற்றிய பல இரகசியங்களைத் திருவள்ளுவர் கூறிவைத்துள்ளார்.

'ஒரு தடவை உண்ட உணவு சமிபாடு அடைந்த பின் அடுத்த உணவை உண்பானாகில் அவனுக்கு மருந்து தேவைப்படாது பசிக்காமல் சாப்பிடக்கூடாது. தனது உடலுக்கு இசைவான உணவை மட்டுமே உண்ணவேண்டும். இது மாறுபாடில்லாத உண்டி. அளவறிந்து உண்ண வேண்டும் அப்படி உண்பவனுக்கு இன்பம் மிகுதியாக உண்பவனுக்கு நோய் மிகுதியாக உண்பவன் 'பேரிரையான்' இப்படி வள்ளுவர் கூறுகிறார். பேரிரையான் என்ற சொற்றொடரில் எவ்வளவு நயமுண்டு.

இழிவறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும் கழிபேர் இரையான்கண் நோய். (946)

இவையெல்லாம் திருக்குறள் சிந்தனைகள் இவற்றைப் பேணித் தமிழ்மக்கள் தமதுடல் நலத்தைப் பேணவேண்டும்.

திருமூலர் போன்ற பல சித்தர்கள் உடலைக் கோயிலாகக் கண்டவர்கள் 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று பாடியவர்கள்.

யோகாசனம் போன்ற உடற்பயிற்சிகள் உடலை மிகவும் நெகிழ்ச் சுடையதாகச் செய்கின்றன. போதிய ஓய்வு, உரிய பயிற்சி, மிதமான உணவு - இவை தான் முதுமையிலும் சுகமாக, இன்பமாக வாழும் இரகசியம்.

**அரசியல் நினைவுகள்**

1947 ஆம் ஆண்டு செனட் சபை உருவாகிய காலம் தொடக்கம் அது 1972 ஆம் ஆண்டு கலைக்கப்படும் வரைக்கும் இரண்டு ஆண்டு கால இடைவெளி தவிர அச்சபையின் உறுப்பினராக இருந்துள்ளேன். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இக்காலத்தில் குரல் கொடுத்துப் போராடியுள்ளேன்.

பிரித்தானிய அரசிடமிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட சுயாட்சியை சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும் இவ்வாறு அவர் தம் பிறப்புரிமை என்பதே எனது நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது. சிங்களம் மட்டும் மசோதா, பிரஜாவுரிமைச் சட்டம் உட்படத் தமிழ்மக்களுக்கு எதிரான சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக வாக்களித்தேன்.

சிங்களம் மட்டும் மசோதா நிறைவேறிய பின்னர் நான் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு ஒரு நீண்ட மகஜரை அனுப்பி வைத்தேன் தமிழர் பிரச்சினைகளையும், தீர்வுக்கான வழிகளையும் அம்மகஜரில் சுட்டிக் காட்டினேன் அதனை ஓர் ஆய்வு என்று கூறலாம்.

பன்மொழி பேசும் நாடுகள், பல்லின மக்கள் வாழும் நாடுகள் ஆகியவற்றின் அனுபவங்களை. அவை இனப்பிரச்சினையை அணுகிய முறைகளை எடுத்து விளக்கியிருந்தேன்.

**பண்டாவுக்கு மகஜர்**

தமிழ் மக்களின் தாயகத்துக்கு பிரதேச ரீதியாக சுயாட்சி வழங்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அன்று பண்டார நாயக்காவை அம்மகஜரில் வலியுறுத்தினேன்.

இம்மகஜர் கிடைத்ததும் பண்டாரநாயக்கா ஒரு நாள் அதிகாலை தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டார்.

'செல்வாவுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. பௌத்த பிக்குகளால் பிரச்சினையாக இருக்கிறது இருப்பினும் உங்கள் மகஜரைக் கட்டுரை வடிவில் பத்திரிகையில் பிரசுரியுங்கள். எதிரொலியைப் பார்ப்போம்' —என்றார்.

அப்போது (Sunday Observer) சண்டே ஒப்சேர்வர் ஆசிரியராக இருந்த திரு ஏர்னெஸ்ட் கொரியாவை வீட்டுக்கு அழைத்து இக்கட்டுரையை வெளியிடுமாறு வேண்டினேன். 1957 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் இக்கட்டுரை அப்பத்திரிகையில் தொடராக வெளிவந்தது.

பின்னர் பண்டா— செல்வா ஒப்பந்தத்தில் நான் விதந்துரைத்த சிபார்சுகள் பல இடம்பெற்றன. இருப்பினும் ஜே. ஆரின் யாத்திரையும், பௌத்த பிக்குகளின் கிளர்ச்சியும் ஏற்படுத்திய நெருக்கடி காரணமாக அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

**தமிழர் தாயகம்**

தமிழர் தாயகம்பற்றி இன்று அரசாங்கம் கூறும் விளக்கங்கள் சிரிப்புக்கு இடமானவை. இவை பற்றி அண்மையில் இந்தியாவுக்கு விஜயஞ் செய்த [illegible] [illegible] சாரதியிடம் எடுத்துக் [illegible] இலங்கை வந்தபோது கூட்டணியினரிடம் விளக்கினேன்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் கூட வடகிழக்குப் பிரதேசம் ஒரு தனித்துவமான நிர்வாக மாவட்டமாக விளங்கியுள்ளது.

1972, 78 ஆம் ஆண்டு உருவான அரசமைப்புச் சட்டங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனியான மொழி வழி மாநிலமாக வரையறை செய்யப்பட்டுள்ளமை தெளிவு.

சனத்தொகையைப் பொறுத்த அளவிலும் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பெரும்பாலாகப் பேசும் மொழி தமிழே

தமிழ்த் தலைவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் அல்லது சிங்களக் கட்சிகளுக்கும் இடையே உருவாகிய ஒப்பந்தங்கள், உடன்பாடுகளின் அடிப்படையாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர் தம் தாயகம் என்ற நிலைப்பாடு இருப்பதைக் காணலாம்.

நாட்டிலே வன்செயல்கள், வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்ட காலங்களில் தமிழர்களை அரசு கப்பல்களில் ஏற்றி வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்குப் பாதுகாப்பாக அனுப்பவில்லையா? எனவே தமிழர்களின் தாயகம் இவை என்பதில் சர்ச்சைக்கு இடமில்லை. அதுவே எமது உறுதியான நிலைப்பாடாகஇருத்தல் அவசியம்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழுகின்ற முழுப்பகுதியையும் உள்ளடக்கிய தாயகத்துக்கு தன்னாட்சி வழங்குவதே இன்றைய இனப் பிரச்சினைக்கு உடன்பாடான தீர்வாக அமையும். அதுவே எமது இனத்தின் அபிலாஷையைப் பூர்த்தி செய்ய முடியும்.

தமிழ்மொழியைக் கற்றுத் தமிழ் கலாசாரத்தைத் தமிழர்கள் பேணிக் காக்கவேண்டும். ஆங்கிலத்தைக் கற்பதில் நஷ்டமில்லை —இவ்வாறு திரு. [illegible] [illegible] கூறினார்.

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்
★ டென்மார்க்
★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொன்ட், BOND ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

# யுத்த உத்தியால் தமிழர். . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி) களால் குறிபார்த்து எறியப்பட்ட ஈட்டிகளை பறங்கியர் சேகரிக்கவும் தொடங்கியிருந்தார்கள். இது கண்ட தளபதி வீரமாணிக்கதேவன் ஈட்டிச்சேனை அணியிடம் ஈட்டிகளை வீச வேண்டாமென்று உத்தரவிடுகின்றான். அதன் பின் சங்கிலி மன்னனும் தளபதியும் தமக்குள் ஏதோ பேசிக்கொள்கிறார்கள் டுமீல்! டுமீல்! டுமீல்...நல்லூர்ச் சேனை பதுங்கிப் பின் முன் பாய்ந்து கவண்கற்களைச் சுழற்றியடிக்கிறது.

**பறங்கியர் கணிப்பு**

இரு தரப்பினரதும் போர் ஒழுங்கு முறைகள் வெவ்வேறாக அமைந்திருந்ததால் முதல் நாள் யுத்தம் சரியாக நடைபெறவில்லை ஆயினும் நல்லூர்ச் சேனைக்கு உயிர்ச்சேதம் அதிகம்... இதனால் பறங்கிப்படைக்குத் தைரியமேற்படுகிறது. பறங்கித் தளபதி அன்று பூர்த்தாட் ஆனந்தக் களிப்பெய்துகிறான்...

இரண்டாம் நாள் போர் தொடங்கியவேளை ......... நெடுந்தீவிலிருந்து வந்திறங்கிய பறங்கிப்படை போர்க்களம் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதையறிந்த சங்கிலி மன்னன் வல்வெட்டித்துறையில் பாளையமிட்டிருந்த வேளக்காரப்படையை உடன் நல்லூர் கோட்டைக்கு வருமாறு வேவுகாரன் மூலம் ஓலை அனுப்புகிறான்.

**போர் உத்தி**

நெடுந்தீவிலிருந்து வந்திறங்கிய பறங்கி அணி போர்க்களம் வந்து சேர்ந்ததும் போர்க்களத்தில் நின்ற பறங்கிப் படைக்கு உஷார் அதிகரித்துக் கொள்கிறது. நல்லூர்ச்சேனையை நோக்கி சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன ஏலவே வெடிமருந்து நிரப்பிய துப்பாக்கிகள் மூலம் பறங்கியர் விரைவாக வெடி தீர்க்க முடியும்தானே... வெடிதீர்ந்தபின் மருந்து நிரப்புவதற்கு தாமதம் ஏற்படுமல்லவா? முதல் நாள் போரில் கண்ட நிந்தனைகளை அனுபவமாகக் கொண்டு நல்லூர்ச்சேனை பல உத்திகளைக் கையாண்டு நிற்கிறது. பறங்கியரின் துப்பாக்கி வேட்டுகள் விரயமாவதற்காகவே அவ்வாறு தந்திரோபாயம் கையாளப்படுகிறது.

பறங்கியர் தம் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்துக் குறிபார்க்கும் வரைக்கும் ஒரே இடத்தில் நிற்பது போல் நின்ற நல்லூர் படைவீரர்கள் பற்று வாயில் நெருப்பு வைக்கப்பட்டு வெடி தீரப் போகிறதென்பதை உணர்ந்ததும் திடீரெனப் பதுங்கியும், உச்சியும் 'கூ' காட்டி நிற்கின்றனர்.

துப்பாக்கிகளின் முன் துப்பாக்கியில்லாமல் நிற்கும் நெஞ்சுரமிக்க நல்லூர்ச்சேனையின் இரு அணிகள் மெதுவாக அவதானமாக பதுங்கியவாறு முன்னேறுகின்றன. பறங்கியர் தீர்க்கும் வேட்டுகள் பலவும் வீண் விரயமாகிக் கொண்டிருக்கின்றன... ஆனாலும் சில வேட்டுகள் சேதம் ஏற்படுத்தாமலில்லை காயம் பட்ட போர்வீரர்கள் குதிரைக் கரத்தையில் ஏற்றப்பட்டு கிழ்த்திசையில் அமைக்கப்பட்ட சாவடியில் தங்கியிருந்த கைக்குழை வைத்தியர்களிடம் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

(கைக்குழை வைத்தியர் என்பது உள்ளங்கையில் மூலி இலை குழைகளை வைத்து கசக்கிச் சாறு பிழிந்து மருத்துவம் செய்யும் வைத்தியராவர். அரண்மனை வைத்தியர்களான அவர்கள் அரண்மனையின் பக்கத்தே வதிவிடங்களைக் கொண்டிருந்தனர்)

(வளரும்)

பிரயாண ஒழுங்கு

★ அவுஸ்திரேலியா ★ டென்மார்க்
★ சவூதி அரேபியா ★ ஈராக்
★ குவைத்

ஆகிய இடங்களுக்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

மற்றும் பாஸ்போட், BOND ரிக்கற்றிங் உடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு: பே. கணேசமூர்த்தி

மகிழடி வயிரவர் கோயில் முன்பாக சந்நிதி வீதி, அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

